# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜா ம க் கா ர ன் JAMAKKARAN

VOLUME - 2 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 2
FEBRUARY 2018 TAMIL & MALAYALAM
ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=




*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*
*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

✆ 0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



கர்த்தருக்குள் அன்பான வாசகர்கள் அனைவரையும்,

வாழ்த்துகிறேன்.

2018 ஜனவரி மாத ஜாமக்காரன் பலருக்கு பிரயோஜனமாக இருந்ததாக அறிவித்தனர். குறிப்பாக மலேசியா தமிழ் சபைகளின் அவலம் என்ற தலைப்பில் எழுதிய செய்திகள் எங்கள் இந்திய நாட்டில் உள்ள லூத்தரன்,CSI சபைகளிலும் மிகவும் ஏராளமாக மலிந்துகிடக்கின்றன. ஆகவே அவைகளை போட்டோ காப்பி எடுத்து ஆயிரக்கணக்கில் உள்ளூரிலும் வினியோகம் செய்துள்ளோம்.

## இந்திய குடியரசு தினம்

நமக்கு நாமே ஆளும் சுதந்திரம் நம் இந்தியாவுக்கு பெற்றுக்கொடுத்த தேச தலைவர்களுக்காக, பாடுபட்டவர்களுக்காக, நாட்டுக்காக தியாகம் செய்தவர்களுக்காக இந்திய குடியரசு தினத்தில் இந்தியாவில் நடந்த இந்து-முஸ்லீம் மதக்கலவரத்தில் இந்திய சார்பில் கலவரத்தை அடக்க முயன்ற இந்திய ராணுவத்தினர் ஆயிரக்கணக்கில் நாட்டுக்காக வீரமரணமடைந்தார்கள்.



பாகிஸ்தான் - இந்தியா எல்லைகள் பிரிக்கப்பட்டபோது பாகிஸ்தானிலிருந்து ரயிலிலும், கூட்ஸ் வண்டிகளிலும் அனுப்பப்பட்ட இறந்த ராணுவ வீரர்களின் சடலங்களின் எண்ணிக்கை எண்ண முடியாமல்போனது என்ற செய்தி இன்னும் நம் இருதயத்தில் வலி உண்டாக்குகின்றது. இறந்தவர்களின் குடும்பத்துக்கும் குறிப்பாக ராணுவ வீரர்களின் குடும்பத்துக்காக வீர வணக்கம் செலுத்துவோம் - மரித்தவர்களின் குடும்பத்துக்காக ஜெபிப்போம்.

FEBRUARY 2018

சாட்சியில்லாத குடிகார கணவனுடன் வாழ்வது எப்படி? சாட்சியில்லாமல் குடும்பத்துக்கு ஒத்துப்போகாமல் கணவனுடன் சண்டைபோடும் மனைவி ஆகியவர்களுக்கு நீங்கள் எழுதிய ஆவிக்குரிய ஆலோசனை மிக அற்புதம். கணவன் - மனைவிக்கென்று இப்படி ஒரு ஆலோசனை நீங்கள் புஸ்தகமாக எழுதி வெளியிட்டால் பல குடும்பங்களை விவாகரத்து செய்யாமல் வாழ வைக்க முடியும்.

மதுவுக்கு அடிமையான ஆயர்களை, **பிஷப்மார்** எப்படி கையாள்வது, சபையை பரிசுத்தமாக்குவது எப்படி என்ற சுருக்கமான உங்கள் ஆலோசனைகளுக்கு நன்றி. மேலே எழுதியபடி வாசகர்களிடமிருந்த வந்த கடிதங்கள் தொலைபேசி செய்திகள் ஏராளம். கடிதங்கள் எழுதி என்னை ஊக்குவித்தவர்களுக்கு நன்றி.

# தமிழ்நாட்டின் பிரச்சனை:

இப்போதைய தமிழ்நாட்டின் ஆட்சிபோல மிக மிக மட்டமான ஆட்சியை நாம் கேள்விபட்டிருக்கவேமாட்டோம். **எங்கும் லஞ்ஜம், எதிலும் லஞ்ஜம்.** லஞ்ஜம் கொடுக்காமல் 100க்கு 100 உண்மையாக வாழ ஆசைப்படும் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு இன்றைய தமிழ்நாட்டு சூழல் ஒரு பெரும் சவால். எந்த அரசாங்க அதிகாரிகளை சந்திக்கவேண்டுமானால் லஞ்ஜம் கொடுக்காமல் எந்த காரியத்தையும் சாதிக்க இயலாது.

தமிழ்நாட்டில் எந்த ஒரு அரசாங்க அலுவலகங்களில் கால் வைத்தாலும், எந்த கடித தொடர்பு கோப்புகள் ஒருமேசையிலிருந்து மற்றொரு மேசைக்கு அதிகாரிகளின் கையெழுத்துக்காக கோப்புகள் File அசைய வேண்டுமானால் பணம் கொடுக்காமல் கோப்புகள் நகர்வதில்லை. இந்த ஆட்சி எப்போது ஒழியும்' என்று தமிழ் நாடே ஏங்கிக்கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டு MLAக்களின் மேல்உள்ள் வழக்குகளில் நீதிமன்ற தீர்ப்புகள் உடனுக்குடன் வெளிவந்தால் நிச்சயம் ஏதாவது ஒரு மாற்றம் தமிழ்நாட்டு அரசியலில் உண்டாகலாம். அந்த மாற்றம் உண்டானால்கூட லஞ்ஜத்தின் கதவுகளுக்கு திறப்புவிழாவை முதன் முதல் தமிழ்நாட்டில் நடத்திய கூட்டம் தான் மறுபடியும் ஆட்சி பொருப்பை ஏற்றெடுக்கவேண்டி வரலாம். அதையும்கூட இந்தியாவில் மத்தியில்ஆளும் **BJP குறிப்பாக திரு.மோடி** அவர்கள் அந்த குறிப்பிட்ட கட்சி ஆட்சி செய்வதை விரும்பமாட்டார்கள். அதற்காகவே **திரு.ரஜினி** என்ற சினிமா நடிகர் இரண்டு விரல் இந்துமத யோகி முத்திரையுடன் தமிழ்நாட்டில் இறக்கப்படுகிறார். அவரும் மதம் சார்ந்த அரசியலைதான் BJPயுடன் இனைந்து தமிழ்நாட்டில் **மத அரசியலை** அமுல்படுத்துவார்.

ஆனால் **தற்காலிகமாகத்தான்** ரஜினியை BJP அனுமதிக்கும் **திரு. மோடி** அவர்களுக்கு தமிழ்நாட்டின் MP (பார்லிமென்ட்)மார்கள் 40 பேர்கள் தேவை. அதற்காக MP தேர்தல் வரை ரஜினியின் முகம் காட்ட அனுமதிப்பார்கள். திரு. மோடி அவர்களுக்கு தமிழ்நாட்டைப்பற்றியோ . தமிழ்நாட்டு MLAக்களைப்பற்றியோ கவலையில்லை. இந்தியா முழுவதும் தன் சர்வாதிகார பெலம் பெற MPமார்களின் எண்ணிக்கை மிருகபெலத்துடன் தனக்கு கிடைக்கவேண்டும். இந்தியாவின் ஏறக்குறைய அனைத்து மாநிலங்களும் **காவி** கட்சிகளின் ஆட்சியின் கையில் வந்துவிட்டது. மீதி தமிழ்நாடு, கர்நாடகா,கேரளா,பாண்டிச்சேரி ஆகிய இந்த மாநிலங்கள் காவி கட்சிகளின் ஆட்சியின் கீழ்வரவேண்டும். தமிழ்நாடு ஏற்கனவே அறிவிக்கப்படாத **காவி** கட்சியின் ஆட்சியின் பிடிக்குள் அகப்பட்டுள்ளார்கள். **கர்நாடகாவை** ஓரளவு **காவி கட்சி** தன்

கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வைக்கமுடியும் என்று நம்பப்படுகிறது.

ஆனால் **கேரளாவை** காவி கட்சி நெருங்க முடியாது. இப்படி போகிறது இந்திய அரசியல். தமிழ்நாடு முழுவதையும் தமிழ்நாட்டு மந்திரிகளும்,எம்எல்ஏகளும் சுரண்டிமுடித்தாகிவிட்டது. இனி **தமிழ்நாட்டு** மக்களை **தூங்க வைக்கும்** புது திட்டத்தில் தமிழ்நாடு அரசாங்கம் புது சட்டங்களை கொண்டுவரப்போகிறது. அதில் தலைசிறந்த திட்டம்தான் ஆன்-லைனில் சாராயம் வீடுதேடி வரும் மதுவகைகள் யாவும் டோர் டெலிவரி செய்வது. சாராய கடைக்கு போக தயங்கியவர்கள், இதுவரை குடிப்பழக்கத்துக்கு அடிமையாகாத பெண்கள்-ஆண்கள் யாருக்கும் குடித்து மயங்கிடக்க வந்தது தான் டோர்டெலிவரி திட்டம். சாராயம்(டாஸ்மார்க்) வீட்டுக்குவீடு சப்ளை செய்ய தொலைபேசியில் அறிவிப்பு கிடைத்தவுடன் வீட்டுக்கே வந்து சப்ளை செய்வார்கள். இந்த திட்டத்தில் என்னென்ன பிரச்சனைகள்,கொலைகள், பணத்துக்காக சொந்த குடும்பத்தையே கொலை செய்வது யாவும் இனி அதிகமாகும். குடிபழக்கம் உள்ள கிறிஸ்தவ சபை ஆயர்கள், பாஸ்டர்மார்கள் இனி தலைப்பா கட்டிக்கொண்டு வேஷம் மாறி டாஸ்மார்க் சாராய கடைமுன் கியூவில் நிற்கவேண்டாம். வீடு தேடி வருகிறது சாராயம். கேட்க பயங்கரமாக இல்லை. தமிழ்நாடு **பெரும் அழிவை** நோக்கி போய்கொண்டிருக்கிறது. அரசாங்கம் வங்கி மூலம் வாங்கி கடன் செலுத்தாததால் எந்த ஒரு புது திட்டம் செயல்படுத்த வங்கி பணம் கொடுக்க மறுக்கிறது. அரசாங்க கஜானா காலியானதால் வங்கிகளிடம் கடன்கேட்டால் இப்போது நிச்சயமாக பணம் தரமாட்டார்கள், ரிசர்வ் வங்கியும் தமிழ்நாட்டு அரசாங்கம் தங்கள் கடன் அடைக்காமல் நாட்டின் எந்த வளர்ச்சி திட்டத்திற்கும் ரிசர்வ் வங்கி கடன் தருவதில்லை என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டது.

மத்திய அரசாங்க காவிகட்சிகள் **வருமானவரி** சலுகையை பல **கிறிஸ்தவ ஸ்தாபனங்களுக்கு** நிறுத்திவிட்டது. தமிழ்நாட்டு கிறிஸ்தவ ஊழியங்கள் பெரும்ஆபத்தில் அகப்பட்டுள்ளது. மிஷனரி ஸ்தாபனங்களுக்கு, சமுகசேவை ஸ்தாபனங்களுக்கு மக்கள் கொடுக்கப்படும் **காணிக்கைகளை வருமானம்** என்று அழைக்கப்பட்டு அவைகளுக்கு வரியும், GST வரியும் வசூலிக்க போவதாக டெல்லியிலிருந்து வந்தசெய்தி. ஆலயஆராதனை காணிக்கையும் **வருமானம்** என்று பெயரிட்டு அதற்கு GST யும், வரியும் வசூலித்தால் ஆலய ஊழிய திட்டங்கள் முழுவதும் முடங்கும். குறிப்பாக மிஷனரி பணிமுடங்கும். இந்திய காவி ஆட்சியின்மூலம் **கிறிஸ்தவ சபைகளுக்கும்,ஸ்தாபனங்களுக்கும்** இனிவரும் காலத்தில் பெரும் பிரச்சனைகள் உருவாகப்போகிறது. **இனியாவது நம் பாரததேசத்தை ஆளுகிறவர்களுக்காக** தினமும் ஜெபிக்க தீர்மானம் எடுக்கலாமா! ஜெபிப்போம்.

கர்த்தரின் பணியில்

**- டாக்டர் புஷ்பராஜ்**

## திருத்தம்

கடந்த ஜனவரி 2018 ஜாமக்காரனில் பக்கம் 22 கடைசி வரிகளில் வெல்லூர் ஊரில் கல்லூரி பிரின்சிபல் அவர்களும் **பதவி நீக்கம்** செய்யப்பட்டார் என்பது தவறு. பிரின்ஸ்பால் அவர்கள் கல்லூரி சட்டப்படி 2017 மே மாதம் 31ம் தேதி சமாதானத்துடன் ஓய்வு பெறும் வயதின்படியே அவர் **ஓய்வு பெற்றார்** என்பதுதான் சரியானது.

# சத்திய வார்த்தை

# புதிய ஆண்டில் நம்மை வழிநடத்தும் கர்த்தருடைய கரம்

முதலாம் மாதம் முதல் தேதியில் எஸ்ரா பாபிலோனிலிருந்து எருசலேமிற்கு பிரயாணமாகி புறப்பட்டான். தேவனுடைய தயவுள்ள கரம் அவன் மேல் இருந்தது. (எஸ்றா. 7:9)

மனித வாழ்க்கை ஒரு நீண்ட பயணம். நாம் இந்த உலகில் பிறந்தவுடன் அந்த பயணம் ஆரம்பமாகிறது. நாம் மரிக்கும் போது அது முற்றுப்பெறுகிறது. மனிதனுடைய பிறப்பிற்கும் இறப்பிற்கும் உள்ள இடைவெளி ஒவ்வொரு நாளும் குறைந்துகொண்டேபோகிறது. அதை அவன் உணர்வது கிடையாது. தாயின் வயிற்றிலிருந்து (WOMB) கல்லறை (TOMB) நோக்கி செல்லும் இப்பயணத்தில் இடைவெளி காலத்தைதான் நாம் வாழ்க்கை என்று அழைக்கிறோம். இந்த இடைவெளி காலத்தில் அவன் செய்யும் செயல்கள் அவன் ஆற்றும் பணிகள் நல்லது - கெட்டது, நன்மை - தீமை ஆடும் ஆட்டம், போடும் கூச்சல் கூக்குரல் அவன் போன பின்பு நாளாவட்டத்தில் மக்கள் மனதில் இருந்து மக்கி மண்ணாகி மறைந்து கரைந்து காணாமல் போகிறது. இந்த உண்மையைத்தான் மோசே அவரது பாடலில் (90ம் சங்கீதம் ) மனித வாழ்க்கை என்பது காலையில் முளைத்து பூத்து மாலையிலே உலர்ந்துபோகும் புல்லுக்கு ஒப்பாயிருக்கிறது என்று குறிப்பிடுகிறார்.

அந்த சங்கீதத்தில் மனிதனுடைய ஆயுசு நாட்கள் 70 வருடம். பெலத்தின் மிகுதியில் அதிகபட்சம் 80 வருடம் என்று குறிப்பிடுகிறார். (Max 80 Years) என்று எழுதிவிட்டு அவர் 120 வருடம் வாழ்ந்தது இங்கு குறிப்பிடதக்கது.

தனது 120 வயதிலும் அவர் யாருடைய உதவியும் நாடாமல் நல்ல கண் பார்வையுடனும் நன்றாக நடந்து திரிந்து தனது வேலைகளை தானாகவே செய்தார் என்பதை நாம் மறக்கக்கூடாது. ஆனால் பேதுருவை பார்த்து இயேசு உன்னுடைய முதிற் வயதில் உனக்கு இன்னொருவர் உதவி இல்லாமல் உன்னால் வேஷ்டியோ பேண்டோ கூட போடமுடியாது. அவ்வளவு பெலவீனப்பட்டு போவாய் என்று யோவான் 21:18ல் கூறுகிறார்.

ஆம் 80, 90 வயதாகும்போது நமது சரீரம் பலவீனப்பட்டு நம்மால் ஒரு வேலையும் செய்யமுடியாத ஒரு பரிதாப நிலை ஏற்படும். ஆனால் மோசேயிக்கு அப்படி ஏற்படவில்லை.

## தேவனுடைய தயவுள்ள கரம் நம்முடன் இருக்கட்டும்

எஸ்றா பாபிலோனிலிருந்து எருசலேமிற்கு கி.மு. 457ம் ஆண்டு புறப்பட்டு செல்கிறார். அது ஒரு 4 மாத பயணம். 800 கி.மீ. செல்ல 120 நாட்கள் ஆனது. ஒரு நாளைக்கு 7 கி.மீ. பயணம் சென்றது குறிப்பிடத்தக்கது. எஸ்றா புது வருடத்தன்று முதலாம் மாதம் முதலாம் நாள் பாபிலோனிலிருந்து எருசலேம் நோக்கி புறப்பட்டார். செருபாபேல் மூலமாக இரண்டாவது ஆலயம் எருசலேமில் கி.மு. 520ல் கட்டிமுடிக்கப்பட்டு ஏறுக்குறைய 60 வருடங்கள் உருடோடிவிட்டது. ஆனாலும் எருசலேம் ஆலயத்தில் வேத வசனத்தை கருத்தாய் போதிக்க கூடிய **சரியான போதகர்** இல்லை. அந்த வெற்றிடத்தை நிறப்ப வேத வசனத்தை ஆராயவும் அதன்படி போதிக்கவும் **தனது இருதயத்தை ஆயத்தப்படுத்தியிருந்த எஸ்றா** எருசலேமிற்கு புறப்பட்டு செல்கிறார். அவருடைய நீண்ட கால்நடை பயனத்தின்போது கர்த்தருடைய தயவுள்ள கரம் அவர்மேல் இருந்தது என்று வேதம் சொல்கிறது.

ஆம். நமது வாழ்க்கை பயனத்தின்போது இந்த 2018ம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள ஒவ்வொருவரையும் ஆண்டவரது தயவுள்ள கரம் நமது வாழ்க்கை பயனத்திலும் நம்மோடிருக்கவேண்டும். அந்த பயணத்தில் பல எதிர்பாராத ஆபத்துக்கள் விபத்துக்கள், மோசங்கள், பள்ளங்கள், மேடுகள், கெடுபிடிகள் உண்டு என்பதை நாம் உணரவேண்டும்.

ரயில் பயணத்தை எடுத்துக்கொள்ளுங்கள் அதில் எத்தனை தலைவலிகள் கால் சருக்குதல்கள், எதிர்பாராத ஏமாற்றங்கள், ஆபத்துக்கள். ஒரு ரயில் பயணத்தை என்னால் மறக்கமுடியாது. எனது டிக்கட்டை பரிசோதித்த டிடிஇ. அதில் **ஆண்** என்று போடுவதற்கு பதிலாக **பெண்** என்று போட்டிருப்பதை நான் கவனிக்க தவறிவிட்டேன். அதன் விளைவாக மீண்டும் மறுபடியும் **நான் பயண கட்டணம்** கொடுக்கவேண்டியதாயிற்று. என்னிடம் பணம் இருந்ததால் எப்படியோ சமாளித்தேன் அப்படி பணம் இல்லையென்றால் என்ன நடந்திருக்கும். பயணத்தை ரத்து செய்திருப்பேன். இத்தவறு எப்படி நடந்தது என்று யோசித்தேன். அப்பொழுதுதான் ஒரு உண்மை பிடிபட்டது. அதாவது Mr. S. Panner selvam என்று எழுதிக்கொடுத்ததில் Mr.ம் sம இணைந்து என்னை Mrs. Panner selvam ஆக்கி Male என்பது Femaleஆக மாறி டிக்கடிற்குள் நுழைந்துவிட்டது. இன்னொரு முறை பம்பாயில் இரவு 12-30 மணிக்கு ஒரு ரயிலில் Book பண்ணினேன். அனறு 12-30 மணிக்கு நான் சென்ற போது TTE என்னை பார்த்து நீங்கள் போக வேண்டிய ரயில் முந்தைய நாள் அதிகாலை 00-30 மணிக்கே போய்விட்டது. You are exactly 24 hours late now, you are an illegal passanger without ticket என்று கூறினார்.

### கப்பல் பயணத்தில் ஒருவர் இறந்துவிட்டார்.

ரயில் பயணத்தினபோது பெட்டி, பணம், பொருள் இழந்தவர்கள் அநேகர் உண்டு. என்னை போலவே இதை வாசிக்கிற உங்களில் பலர் பயணத்தின்போது பொருள், பணம். ஏன் டிக்கட்டைகூட இழந்தவர்கள்அநேகர் இருக்கலாம். நமது வாழ்க்கை பயணத்திலும் இதுபோன்ற பல பிரச்சனைகள்

பல பள்ளங்களும் மேடுகளும் சூறாவலிகளும் சுனாமிகளும் இருப்பதை நம்மால் தடுக்கமுடியாது. நமது இந்த வாழ்க்கை பயணத்திலும் எதிர்பாராத இழப்புகளும் ஏமாற்றங்களும் ஏன் இறப்பு கூட நடைபெறும். 2008 ஆண்டு நானும் என் மனைவியும் அந்தமான் போர்ட் பிளேயர்லிருந்து சென்னைக்கு 52 மணிநேர கப்பல் பயணம முடிந்து சென்னையை அடைந்த போது ஒரு தகவல் எங்களை அதிரச்செய்தது. நமது தமிழ்காரர் ஒருவர் தனியாக பயணம் செய்தவர். நாங்கள் பயணம் செய்த அதே கப்பலில் பயணம் செய்தவர் பயணத்தின் போது இறந்துவிட்டார் என்ற செய்தி, நடுக்கடலில் தன்னந்தனியாக மரணத்தை சந்திப்பது என்ன கொடுமை.

இதை வாசிக்கிற உங்களுக்கும் எனக்கும் இந்த 2018 என்ற புதிய ஆண்டிற்குள் அடியெடுத்து வைத்திருக்கிற நம் ஒவ்வொருவரையும் கர்த்தரின் கரம் நம்மை வழிநடத்தும்படியாக நம்மை அவரது கரத்திற்குள் ஒப்படைக்கவேண்டும். **எஸ்றாவின் 4 மாத 800 கி.மீ. நடை** பயணத்தின்போது அவரை பாதுகாத்து வழிநடத்திய கர்த்தருடைய தயவுள்ள கரம் நம்மையும் வழிநடத்தும்படியாக ஒப்புக்கொடுக்க வேண்டும். இந்த ஆண்டு மாத்திரமல்ல வரப்போகும் நமது எஞ்சிய நாட்களிலும் கர்த்தருடைய கரம் நம்மை எவ்வாறு வழிநடத்தப்போகிறது என்பதை நாம் சிந்திப்பது நல்லது.

1. **வழிநடத்தும் கரம்** : பாபிலோனிலிருந்து எருசலேம் பயணத்தின்போது எஸ்றாவை **தேவனுடைய தயைவுள்ள கரம் வழிநடத்தியது.** (எஸ் 7:9) என்று வாசிக்கிறோம்.
2. **திடப்படுத்தும் கரம் : தேவனுடைய கரம்** அவர்கள்மேல் இருந்த காரணத்தால் - அந்த நல்ல வேலைக்கு எல்லோருடைய கைகளும் திடப்படுத்தப்பட்டது. (நெகே. 2:18)
3. **தாங்கும் கரம் :** நீதிமான் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை. **கர்த்தர் தம் கைகளினால் அவனை தாங்குவார்.** (சங்கீதம் 37:24)
4. **போஷிக்கும் கரம் : உம்முடைய கரத்தை திறந்து ஏற்றவேளையில் ஆகாரத்தை தந்து நன்மைகளினால் திருப்தியாக்கினீர்.** (சங் 104:27,28)
5. **பாதுகாக்கும் கரம் : என் கையில்** இருக்கிற உங்களை எவனும் **பறிக்கமுடியாது.** யோ. 10:28

## 1. வழிகாட்டும் கரம் :

நமது வாழ்க்கை பயணத்தில் பாதை காட்டும் கர்த்தருடைய கரம். : முதலாம் மாதம் முதல் தேதியிலேயே பாபிலோனிலிருந்து எருசலேம் நோக்கி எஸ்ரா குழுவினர் பயணம் தொடங்கினார்கள். அந்த 4 மாத பயணத்தின்போது ஆண்டவருடைய அருட்கரம் எஸ்ராவோடு இருந்ததால் 5வது மாதம் முதல் தேதியிலேயே (சுகப்பத்திரமாக) எருசலோம் சென்றடைந்தார்கள். (எஸ்றா 7:9)

**நமது வாழ்ககையில் நம்மை வழிநடத்தும் வல்ல கரம்.**

நாம் ஒரு ஊருக்கு சரியான பாதையை காண்பிக்க வழிநடத்தும் மற்றவர்களது உதவி தேவைப்படுகிறது. அதுமாத்திரமல்ல நாமும் கவணமாக செல்லவேண்டும். உங்கள் பயணத்தின் பாதையில் போதிய கவனம் இல்லையேல் உங்கள் பயணம் பாதியிலேயே முடியும் என்ற வாசகம் ஒரு சாலையில் எழுதப்பட்டிருந்ததை நான் வாக்கிங் போகும் போது வாசித்தது என் நினைவிற்கு வருகிறது. கடலில் கப்பலை ஓட்டும் மாலுமிக்கு படகை ஓட்டும் படகோட்டிக்கு விமானத்தை ஓட்டும் பைலட்டுக்கு யாராவது ஒருவர் வழிகாட்டியாக இருக்கவேண்டும். மறைந்த ஆந்திர முதல் மந்திரி. Y.S. ராஜசேகர ரெட்டி அவர்கள் சென்ற எலிகாப்பிட்டரை ஓட்டிய விமானிக்கு பாதை சரியாக தெரியாததால் மலையில் உச்சியில் மோதி விபத்துக்குள்ளானதை நாம் அறிவோம்.

சில மாதங்களுக்கு முன்பாக TVயில் ஒரு உண்மை சம்பவம் காண்பிக்கப்பட்டது. சென்னை கடற்கரையிலிருந்து 4 மீனவர்கள் மீன் பிடிக்க சென்றார்களாம். சற்று பெரிய படகு, இதைக்கண்ட இன்னும் 3 பேர்கள் நாங்களும் வருகிறோம் என்று சொல்லி படகில் ஏறி கடலுக்குள் உற்சாகமாக சென்றார்கள். மீன் பிடித்து நன்றாக சாப்பிட்டு சந்தோஷப்பட்டார்கள். ஆனால் பாதையை தவறவிட்டார்கள். 90 நாட்களாக கடலில் சிக்கி தவித்தார்கள். இதை கண்ட கடைசியாக ஏறிய மூன்று பேர்களும் இவர்களை நம்பாமல் கடலில் குதித்துவிட்டார்களாம். இவர்கள் சாப்பாடு இல்லாமல் மழை தண்ணீரை குடித்து 90 நாட்கள் சுற்றி அலைந்துவிட்டு இறுதியாக கல்கத்தா போய் சேர்ந்து பின்பு சென்னை வந்து சேர்ந்தார்களாம். அவர்களது மனைவி பிள்ளைகள் செத்துப் பிழைத்தார்கள். எப்படியே கரை சேர்ந்து வந்துவிட்டார்கள். ஆனால் கடலில் குதித்த அந்த மூன்று பேர்களும் என்ன ஆனார்களோ என்று இன்று வரை யாருக்கும் தெரியாது.

ஆம். ஏற்கனவே எழுதியதுபோல வாழ்க்கை பயணம் என்பது நாம் எச்சரிக்கையுடன் பயணம் செல்லவேண்டியதாகும்.ரயிலிலோ,பஸ்ஸிலோ பயணம் செய்யும்போது படியில் நின்று பயணம் செல்லக்கூடாது. தலையை கையை வெளியே நீட்டுவது ஆபத்து. என்னுடைய B.E.,Classmate ஒருவன் 1964ம் ஆண்டு ஆல் இந்தியா டூர் சமயத்தில் ரயிலில் ஒரு பெட்டியிலிருந்த இன்னொரு பெட்டிக்கு தாவி விளையாடிதால் அந்த விளையாட்டு வினையாக மாறி ஓடிக்கொண்டிருந்த ரயிலில் அவளது தலை அருகில் இருந்த ரயில் கம்பத்தில் மோதி அங்கேயே செத்து விழுந்தான். ஆல் இந்தியா டூர் ரத்து செய்யப்பட்டது. நான் மாத்திரமல்ல என்னோடு படித்த எல்லோருக்கும் மறக்கவே முடியாத ஒரு சோகமான சம்பவம் ஆகும். ஒரு சிறு கவனக்குறைவு மரணத்தில் முடிந்தது. அவனது மரணம் பெற்றோர்களுக்கு எப்படி இருக்கும்.

நீங்கள் எச்சரிக்கப்படுத்தப்படுகிறீர்கள். உங்கள் பயணத்தின்போது உங்களுக்கு பாதை தெரியவில்லையா? அப்படியானால் ஒன்று செய்யுங்கள். அது என்ன தெரியுமா? எங்கேயும் போகாதீர்கள். எங்கு போகிறோம்? என்று தெரியாமல் பயணம் செய்கிறதைவிட எங்கேயும் போகாமல் நிற்பது புத்திசாலித்தனம். ஆண்டவரது கரம் உங்களை வழிநடத்த வேண்டுமானால் அவரது கரத்தை பார்க்கவும், உணரவும் நீங்கள் கற்றுக்கொள்ளவேண்டும்.

**சாஸ்திரிகளின் இமலயா தவறு- ஆணைக்கும் அடி சருக்கும்.** கிழக்கிலிருந்து அந்த சாஸ்திரிகள் இயேசு பாலகனை பார்த்து வணங்குவதற்காக புறப்பட்டபோது வானத்திலிருந்த **ஒரு நட்சத்திரம்** அவர்களுக்கு வழி காட்டியது. 1000க்கணக்கான மைல்கள் பயணம் செய்தபோது அவர்களை அருமையாக துல்லியமாக வழி நடத்திய அந்த நட்சத்திரத்தை வெகு அருகிலேயே வந்தபோது அந்த நட்சத்திரத்தின் வழிநடத்துதலை சரியாக கவனிக்காமல் ஏரோதின் அரண்மனைக்கு இந்த சாஸ்திரிகள் வந்துவிட்டார்கள். **ஆணைக்கும் அடி சறுக்கும்** என்ற பழமொழிக்கு இணங்க அந்த சாஸ்திரிகள் ஆண்டவரின் கரமாகிய அந்த நட்சத்திரத்தின் திசை காட்டும் கருவியில் சிறிது பழுது ஏற்பட்டதைபோல பாலாய்போன ஏரோதின் அரண்மனைக்கு போய், எங்கள் அப்பா குழுக்கைக்குள் இல்லை என்று பழமொழி சொல்வதுபோல **நுனலும் தன் வாயால் கெடும்** என்ற சொல்லுக்கிணங்க ஆயிரக்கணக்கான பச்சிளங்குழந்தைகளின் சாவிற்கு இவர்கள் காரணமாகிவிட்டார்கள் என்ன பரிதாபம்!. ஆண்டவரது வழிநடத்துதலை நாம் தவறாக புரிந்துகொண்டதால் நம்மை சுற்றியிலும்உள்ள மற்ற மக்களும் பாதிக்கப்படுகிறார்கள். ஆம் நமது வாழ்க்கை பயணத்தில் ஏதாவது தவறு நடந்தால் அதன் பின் விளைவுகளுக்கு நாம் தான் காரணம் என்பதை நாம் மறக்கக்கூடாது . கடந்தபோன 2017ம் ஆண்டில் நான் செய்த சில தவறுகளினால் நமது வாழ்க்கையிலும் நம்மை சார்ந்து வாழும் பிறரது வாழ்க்கையிலும் பல பாதகமான பாதிப்புக்கள் ஏற்பட்டது என்பதை நாம் மறக்ககூடாது. அப்படிப்பட்ட தவறுகள் - சின்ன சின்ன தவறுகளை - **திரட்சை தோட்டத்தை கெடுக்கும் குள்ள நரிகள்போல** குட்டிகுட்டி தவறுகளை நாம் தவிர்க்கவேண்டும். ஒரு தவறு செய்வது பெரிதல்ல ஆனால் அந்த தவறிலிருந்து ஏதாவது ஒரு பாடம் நீங்கள் கற்றக்கொண்டால் உங்கள் தவறு ஒரு பாடமாக மாறுகிறது. நீங்கள் செய்த தவறிலிருந்து ஒரு பாடம்கூட உருப்படியாக நீங்கள் கற்றுக்கொள்ளாத பட்சத்தில் அந்த தவறு உண்மையிலேயே தவறுதான். சாஸ்திரிகள் ஏரோதின் அரண்மனைக்கு சென்றது ஒரு பெரும் இமாலய தவறு. ஆனால் அதைத்தொடர்ந்து ஆயிரக்கணக்கான பிள்ளைகள் கொலைசெய்யப்பட்டதை கேள்விப்பட்டு இவர்கள் ஏரோது ராஜாவிடம் சொல்லமலே தங்களது ஊருக்கு கம்பி நீட்டிவிட்டார்கள் என்பதை நாம் கவனிக்க தவறகூடாது. நமது பூலோக வாழ்க்கையில் பாதை தெரியாத ஆட்டைபோல தற்சமயம் அலைந்து திரிகிறீர்களா? அந்த வங்கக்கடலில் சிக்கி அலைந்த அந்த மீனவர்களைப்போல அலைந்துக்கொண்டிருக்கிறீர்களா? உங்களுக்கு தேவை ஒரு வழிதுணை, ஒரு வழி காட்டி, ஒரு கலங்கரை விளக்கம்.

**யார் குருடர் ?**

சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு விநேதமான சம்பவம் நடந்தது. நானும் ஒரு கண் தெரியாத போதகரும் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு போய்க்கொண்டிருந்தோம். அவர் ஒரு குருடர். எனவே நான்தான் வழிகாட்டியாக போய்கொண்டிருந்தேன். ஒரு குறிப்பிட்ட ஒரு இடத்திற்கு வந்தபின் வலதுபக்கம்- இடதுபக்கம் திரும்புவதா? என்று எனக்குள் ஒரு சந்தேகம் வந்துவிட்டது. நான் . . . . . . . . . . . . . . . . . . . . . . . Blind போதகர் இடதுபக்கம்தான் போகவேண்டும் என்று சற்று அழுத்தி அடித்து சொன்னார். என் மனதிற்குள் இவரே **ஒரு குருடு** என்ன இவர்

இப்படி அடித்து சொல்கிறார் என்று மனதிற்குள் நினைத்துகொண்டு அவர் காட்டிய இடது பக்கமே சென்றோம். கொஞ்ச தூரத்தில் நாங்கள் போகவேண்டிய இடத்திற்கு வந்துசேர்ந்தோம். உண்மையிலேயே அவர் தான் கரெக்ட். எனக்கு ஒர சந்தேகம், நான் குருடா? அல்லது அவர் குருடா? நான் கண்ணிருந்தும் குருடர் அவர் கண்ணில்லாத பார்வையுள்ளவர்.

ஆம் நமது வாழ்க்கையில் சில சமயம் இதுதான் சரி என்று நம் உள் மனசு சொல்லும் ஆனால் ஆண்டவர் அதுவல்ல இதுவே என்று சொல்லும்போது நாம் அவரது வார்த்தைக்கும் வழிநடத்துதலுக்கும் கீழ்படிவது நல்லது. ஆண்டவரது சரியான வழிநடத்துதலை பெற வேண்டுமானால் அதற்கு ஜெபம் தேவை. வேத வசனம்தான் வெளிச்சம். நான் செல்லும் பாதைக்கு தீபம். வேத வசனத்தை நன்றாக வாசித்து தியானம் செய்யுங்கள். ஆண்டவரது வழி நடத்துதலுக்கு கீழ்படியுங்கள். நீங்கள் வலதுபுறமோ இடதுபுறமோ திரும்பும்போது இதுதான் வழி இதில் நடந்து செல்லுங்கள் என்று உங்களுக்கு பின்னாலே இருந்து நான் சொல்லும் வார்த்தையை கேட்டு அதன்படி நடவுங்கள். (ஏசாய 30:21)

**திடப்படுத்தும் கர்த்தருடைய கரம் :**

**என் தேவனுடைய அருட்கரம் என்னோடு இருப்பதையும் மன்னர் என்னிடம் சொன்ன வார்த்தைகளையும் அவர்களிடம் நான் அறிவித்தபோது அவர்கள் உடனே எழுந்து கட்டுவோம்** வாருங்கள் என்று சொல்லி அந்த நல்ல வேலைக்கு அனைவரது கரங்களையும் திடப்படுத்தினார்கள். (நெகே 2:15)

ஜார்ஜ் வாஷிங்டனின் முன் உதாரணம் : ஒரு முறை அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டன் தனது குதிரையில் வந்துக்கொண்டிருந்தார். அது மாலை மயங்கும் நேரம் அந்த சமயத்தில் சில போர் வீரர்கள் கடப்பாறையை எடுத்து ஒரு பாறாங்கல்லை அகற்றுவதற்கு பெரும் பாடுபட்டுகொண்டிருந்தார்கள். அவர்களுக்கு அருகில் ஒருவர் அதாவது அவர்களது மேலதிகாரி நின்றுகொண்டு கையை கட்டி சும்மா நின்றுகொண்டிருந்தார். குதிரையை விட்டு இறங்கிய வாஷிங்டன் அந்த மேலதிகாரியை பார்த்து நீங்களும் உதவ வேண்டியதுதானே என்று கேட்டபோது. ஓ. அது எப்படி நான் ஒரு ஆர்மி கேப்டன், சிப்பாய் செய்யும் சிப்பந்தி வேலையை கேப்டன் எப்படி செய்வது என்று பதில் கொடுத்தார். வந்திருப்பது Chief of Army வாஷிங்டன் என்பதை கேப்டன் அறியவில்லை.

உடனே வாஷிங்டன் அவர்கள், உடனே இன்னொரு கடப்பாறையை எடுத்துக்கொண்டு எல்லாருடன் சேர்ந்து Come on Boys 123 என்று கோஷம் போட்டுக்கொண்டே அனைவரையும் உற்சாகப்படுத்தி அனைவரது கரங்களையும் பலப்படுத்தி அந்த பாரங்கல்லை உடனடியாக புரட்டிபோட்டு நகர்த்திவிட்டார்கள். எல்லாருக்கும் ஒரே சந்தோஷம் ஒரே உற்சாகம். இவ்வளவு

நேரமாக இத்தனை பேர்களும் சேர்ந்து செய்யமுடியாததை இந்த வாஷிங்டன் வந்து செய்துவிட்டார். குதிரையில் ஏறிக்கொண்டு எல்லாரையும் பார்த்து My Boys அடுத்தமுறை இப்படி ஏதாவது கல்லை புரட்டவேண்டுமானால் இந்த Chief of Army வாஷிங்டனை கூப்பிடுங்கள் என்று சொல்லிவிட்டு தன் குதிரையில் பறந்து மறைந்துவிட்டார். வந்தது வாஷிங்டன் என்று கேட்டவுடனே அங்கிருந்த அனைவரும் அப்படியே வாயடைத்து போய்விட்டார்கள். அமெரிக்க ஜனாதிபதி வாஷிங்டன் அந்த 10 பேர் வீரர்களின் கரங்களை பலப்படுத்தி அந்த கல்லை புரட்டிப்போட்டது போல ஆண்டவரும் நம் ஒவ்வொருவரது கரத்தையும் பலப்படுத்த ஆயத்தமாக இருக்கிறார். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் சுமக்கமுடியாத ஒரு பெரிய பொறுப்பு உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்று எண்ணி உங்கள் கைகள் தளர்ந்து காணப்படுகிறதா? உடனே ஆண்டவரை கூப்பிடுங்கள். பெரும் சுமையை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லோரும் **நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்** என்று ஆண்டவர் நம்மை அழைக்கிறார். மத். 11:28

## அந்த நல்ல வேலை என்னென்ன ?

அந்த நல்ல வேலைக்கு அவரவர் கரங்களை ஆண்டவரது கரம் பெலப்படுத்தி திடப்படுத்தியதாக வேதத்தில் வாசிக்கிறோம். அப்படியானால் அந்த நல்ல வேலை என்னென்ன என்பதை நாம் அறிந்துகொள்வது நமது கடமை.

### 1. ஆலயம் கட்டும் பணி :

நல்ல பணிகளில் இது மிக முக்கியமானது மிக சாலச்சிறந்தது. ஆண்டவரது ஆலயத்தை கட்டும் கட்டுமான பணி. பாபிலோனிய சிறையிருப்பின் காலத்திற்கு பின்பு எருசலேம் பட்டிணத்தில் கோரேசு ராஜாவின் ஆட்சிக் காலத்தில் இரண்டாவது ஆலயம் கட்டும் பணி தொடரப்பட்டது. ஆனால் அந்த பணியில் தொய்வு ஏற்பட்ட காரணத்தால் மக்கள் ஆலயம் கட்டும்பணியை ஓரங்கட்டிவிட்டு தங்களுக்கு வீடு கட்ட தொடங்கிவிட்டார்கள். பல எதிர்ப்புகள் காரணமாக சோர்ந்து போய்விட்டார்கள். அப்போது **ஆகாய்** தீர்க்கதரிசி அங்கு வந்து மக்களை உற்சாகப்படுத்தினார். ஒவ்வொரு ஊருக்கும் ஆலயம் கட்டும் பணியில் இப்படி சில ஆகாய் தீர்க்கதரிசிகள் தேவை. மக்களின் ஆவி அனல் மூட்டி எழுப்பப்பட்டது. அதன் விளைவு தங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்தில் அவர்கள் அனைவரும் வேலை செய்தார்கள். (ஆகாய் 1:14) தேசத்தின் எல்லா ஜனங்களே நீங்கள் திடம் கொள்ளுங்கள். வேலையை நடத்துங்கள் கர்த்தர் உங்களோடு இருக்கிறார் என்று கூறி செருபாபேலையும் மற்ற யூதர்களையும் ஆகாய் தீர்க்கதரிசி உற்சாகப்படுத்தினார். நீங்கள்கூட ஆண்டவருக்காக ஆலயம் கட்டும் பணியில் தற்சமயம் ஈடுபட்டிருக்க கூடும். இச்செய்தியின் மூலமாக ஆண்டவர் உங்கள் கரத்தை திடப்படுத்த

விரும்புகிறார்.

**வயலில் வேலை :** வயலில் வேலை செய்வதை இயேசு நமக்கு ஒரு நல்ல நடைமுறை உதாரணத்தை மத்தேயு 21:28-31கொடுத்திருக்கிறார். ஒருவருக்கு இரண்டு மகன்கள் மூத்த மகனிடம் தம்பி இன்று வயலுக்கு போ என்று கூற அதற்கு அவன் நான் போக இயலாது என்று பதில் சொல்லிவிட்டு பின்பு மனசு மாறி எப்படியோ வயலுக்கு போய்விட்டான். இளைய மகனிடம் தம்பி இன்று வயலுக்கு போய் வேலையை செய் என்று கூற அதற்கு அவன் போகிறேன் என்று கூறி போகவில்லை. இதில் மூத்தமகன் தான் அப்பாவின் விருப்பத்தை நிறைவேற்றியவன் என்று இயேசு தன் உவமையை கூறிமுடித்தார். ஆனால் நான் இந்த உதாரணத்தை நான்கு மகன்களுக்கு சற்று நீட்டிவிட விரும்புகிறேன்.

1. மூத்தவன் போக மாட்டேன் என்று சொல்லிவிட்டு போனான்.
2. இரண்டாவது போகிறேன் என்று சொல்லிவிட்டு போகாதவன்.
3. போகமாட்டேன் என்று சொல்லிவிட்டு போகாதவன்
4. போகிறேன் என்று சொல்லிவிட்டு போகிறவன்.

இந்த நான்கு பேர்களையும் தரம் பிரித்து மார்க் போட்டால் இதில் ரொம்ப ரொம்ப மேசமானவன் 4வது ரேங்க யார் தெரியுமா? **போகிறேன் என்று சொல்லிவிட்டு போகாதவன்.** இவன் நம்ப வைத்துவிட்டு கழுத்தை அறுப்பான். பணம் கொடுக்கிறேன் என்று சொல்லி கடைசி நேரத்தில் கையை விரித்துவிடுபவர்கள்.

மூன்றாவது ரேங்க போகமாட்டேன் என்று சொல்லிவிட்டு போகாமலிருப்பவன் இவன் அட்லீஸ்ட் உண்மையை சொல்லிவிட்டான். பணம் கொடுக்கமுடியவில்லை என்றால் பணம் இல்லை என்று சொல்லிவிடுவது நல்லது அப்போது நாம் வேறு யாரையாவது தேடிப் போகலாம்.அல்லவா!

இரண்டாவது ரேங்க். இது **போகமாட்டேன்** என்று சொல்லிவிட்டு **போவது.**

இது நல்லதுதான். ஆனால் போகமாட்டேன் என்று சொன்ன காரணத்தால் அப்பா இளைய மகனிடம் போய்கேட்கும் கட்டாயம் ஏற்பட்டது. பணம் கொடுக்க மாட்டேன் என்று சொல்லி பணம் கொடுப்பது. பாராட்டப்படவேண்டியதுதான். ஆனால் பணம் கொடுக்க இயலாது என்று சொன்னதால் நமக்கு ஒரு டென்சன் உருவாகிவிடுகிறதே!.

உங்களிடம் உதவி கேட்டவர்களை உச்சகட்ட டென்ஷனுக்கு கொண்டுபோய்விட்டு பின்பு உதவுவது அவ்வவு உசிதமானது அல்ல. இருப்பினும் இவர்கள் செய்த உதவியை நாம் பாரட்டாமல் இருக்கமுடியாது.

முதல் மார்க் யாருக்கு தெரியுமா? போகிறேன் என்று சொல்லிவிட்டு வயலுக்கு போகிறவன்.

பணம் கொடுக்கிறேன் என்று கூறி பணம் கொடுப்பவர்கள்.

மேலே கொடுக்கப்பட்டிருப்பது வயலுக்குபோகும் உதாரணம். ஒருவேளை நம்மில் அனைகருக்கு வயலுக்கு போகும் அவசியம் இராது. வயலுக்கு போகும் உவமை நம்மை ஒன்றும் செய்யாது. உணர்த்தாது. குத்தாது. ஆனால் இந்த உவமையை இன்றைய சூழலில் சொல்ல வேண்டுமானால் இப்படி சொல்லாம். **ஒரு கூட்டத்திற்கு வருகிறேன்** என்று சொல்லிவிட்டு வராமல் இருப்பது. போதகரிடம் **ஆராதனைக்கு கட்டாயம் வருகிறேன்** என்று சொல்லிவிட்டு போகாமல் இருப்பது. ஒரு ஆவிக்குரிய கூட்டம் ஒழுங்கு செய்யும்போது ஒரு குறிப்பிட்ட பொறுப்பு அல்லது உணவு தயாரித்தல் மைக் ஒழுங்கு செய்தல் கூட்டத்தின் **செலவுக்கு இவ்வளவு பணம் கொடுக்கிறேன்** என்று சொல்லிவிட்டு கொடுக்காமல் இருக்கிறது. ஆலய ஏலத்தில் ஒரு பொருளை எடுத்துவிட்டு அதற்குரிய பணத்தை கட்டாயம் கொடுப்பேன் என்று சொல்லிவிட்டு கொடுக்காமல் இருப்பது இது போன்ற செயல்களைத்தான் இயேசு இந்த உவமையில் குறிப்பிடுகிறார்.

**அந்த 4 பிரிவுகளில் நீங்கள் எந்த ரேங்க்கில் உள்ளீர்கள் ?**

2. தாலந்தை பயன்படுத்தி இன்னும் 2 தாலந்தை சம்பாதித்த பணியாளரைப்பார்த்து ஆண்டவர். நன்று நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே சிறிய பொறுப்புகளில் நீங்கள் நம்பிக்கைகுரியவர்கள் என்பதை நிரூபித்தீர். எனவே பெரிய பொறுப்புகளில் அதிகாரியாக உம்மை அமர்த்துவேன். என் மகிழ்ச்சியில் நீரும் வந்து பங்கு கொள்ளும் என்றார். (மத் 25:23)

**3. தாங்கும் கரம் : நீதிமான் விழுந்தாலும் அப்படியே விழுந்த நிலையில் கிடக்கமாட்டார். கர்த்தர் தமது கையில் அவரைத் தாங்குவார்** .(சங். 37:24)

இந்த உலகில் தடுக்கி தடுமாறி கீழே விழாதவர்கள் யாருமே கிடையாது. ஆம். தரையில் விழுவது சகஜம் இயற்கை. To err is human தவறுவது மனித இயல்பு. ஆனால் விழுந்த பின்பு அவர்கள் என்னசெய்கிறார்கள் - என்பது தான் முக்கியம் - நீதிமான்கள் விழுந்த நிலையிலேயே அப்படியே கிடக்கமாட்டார்கள். உடனே எழுந்து நிற்பார்கள்.

உதாரணமாக ஒரு பன்றியும் ஆடும் சேற்றில் விழுந்துவிட்டால் பன்றி என்ன செய்யும்? ரொம்ப நல்லதாய் பேச்சு. பழம் நழுவி பாலில் விழுந்ததுபோல் சந்தோஷப்பட்டு சகதியிலே தொடர்ந்து கிடக்க விரும்பும். இது பன்றியின் குணம். ஆனால் ஆடு சேற்றில் விழுந்த உடனேஅதைவிட்டு எவ்வளவு சீக்கிரத்தில் அது வெளியே வர முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அது வெளியே வர முயற்சிக்கும். இது ஆட்டின் குணம். இதுதான் ஆட்டுக்கும் பன்றிக்கும்

உள்ள வித்தியாசம். நாம் விழும்போது மீண்டும் நாம் எழ விரும்ப வேண்டும். ஆண்டவர் நம்மை அவரது கரத்தை நீட்டி தாங்குகிறார். வாழ்க்கையில் ஒருவர் ரொம்ப நொடிந்து போகும்போது யாராவது அவரைத் தாங்க முன் வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். எனக்குத் தெரிந்த ஒரு கிறிஸ்தவ நண்பர் 48 வயதான அவர் திடீரென 30 நிமிடத்தில் Heart Attack வந்து மரித்துவிட்டார். அவரது மனைவி. பிள்ளைகளுக்கு வேறு உதவி இல்லை. அவர் நடத்தி வந்த கடையை யார் வந்து நடத்துவது? அவரது குடும்பத்தை தாங்க யார் முன் வருவது ? கடைசியாக அவரது சகோதரர் ஒருவர் முன் வந்து அந்த கடையை திறந்து நடத்தி அக்குடும்பத்தை தாங்க முன் வந்தார். ஆண்டவர் இதைத்தான் நமக்கும் செய்ய விரும்புகிறார். **அவர் நம்மை விசாரிக்கிறவராக இருப்பதால், தமது கவலைகளையெல்லாம் அவர் மேல் வைக்கும்படியாக** ஆண்டவர் நமக்கு அழைப்பு கொடுக்கிறார்.

**அனாதி தேவன் உன் அடைக்கலம்** இதைப்பற்றி உபா. 33:27ல் அநாதி தேவன் உனக்கு அடைக்கலம். அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம். அவர் உனக்கு முன் சென்று உன் சத்துருக்களை துரத்தி, அழித்து விடுவார் - என்று வாசிக்கிறோம்.

ஆம் ஆண்டவருடைய வலது கரம் நம்மைத் தாங்குகிறது. (சங் . 18:35)

**டேவிட் பிரெயினார்டு** - என்ற மிஷனரி வடஅமெரிக்காவில் உள்ள மலைவாழ் ஜாதியினர் மத்தியில் தங்கி அவர்களுக்கு ஊழியம் செய்து வந்தார். அங்குள்ள மலைவாழ் ஜாதியினர் அவரை கொல்லுவதற்கு பல முறை முயற்சித்தனர்.

ஒரு சமயம் அவர் தனது கூடாரத்திற்குள் முழங்கால் படியிட்டு ஜெபித்துக் கொண்டிருந்தார். அவரை கொல்லுவதற்கு 4,5 மலைவாழ் ஜாதியினர் அவரது கூடாரத்திற்குள் நுழைந்தனர். அப்பொழுது அவர்கள் கண்ட காட்சி அவர்களை தூக்கி வாரிப்போட்டது.

## பிரெய்னார்டு ஜெபித்தபோது நடந்த அதிசயம் :

ஒரு நல்ல பாம்பு பிரெயினார்டுக்குப் பின்னால் படம் எடுத்தபடி அவரை கொத்துவதற்கு ready ஆக இருந்தது.

இதைக்கண்ட அந்த மலைவாழ் மக்கள் நமக்கு வேலையை வைக்காமல் இந்த பாம்பே அவரை கொல்லப்போகிறது - என்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள். ஆனால் திடீரென அந்த பாம்பு தனது தலையை கீழே போட்டு சர்ரென்று ஊர்ந்து வெளியே போய்விட்டது. பாம்பு வந்ததையோ, தன்னைக் கொல்லுவதற்காக வந்தவர்களையோ டேவிட் பிரெய்னார்டு கவனிக்காமல் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருந்தார். இந்த அற்புத காட்சியைக் கண்ட அந்த

மக்கள் வாயடைத்துப் போய்விட்டனர். இவரைக் கொல்ல வேண்டும் என்று வந்தவர்கள் இப்போது இயேசுவின் சீஷர்களாக மாறி விட்டார்கள் என்ன அதிசயம்.

(அப். 26:1-10) மால்தா தீவில் பவுலின் கையைச் சுற்றிய விரியன் பாம்பை நெருப்பில் உதறி வீசிய போது பவுலை கொலைகாரன் என்று கூறிய மக்கள் - பின்பு அவனை கடவுள் என்று கொண்டாடினார்களா. இதே சம்பவம் தான் டேவிட் பிரெய்னார்டிற்கும் நடந்தது - இங்கு குறிப்பிடத்தக்கது.

## 4. போதிக்கும் கரம் :

ஏற்ற வேளையில் ஆகாரத்தை தருவீர் என்று சகல ஜீவராசிகளும் உம்மை நோக்கி காத்திருக்கும் நீர் உம்முடைய கையைத் திறந்து கொடுக்கும் ஆகாரத்தை அவைகள் வாங்கிக் கொள்ளும் அவைகளை நன்மையால் திருப்தியாக்குவீர் (சங். 104:27, 28)

மேலே கொடுக்கப்பட்டிருக்கிற வசனத்தை நாம் சற்று ஆழமாக சிந்தித்துப் பார்ப்மேயானால். ஒரு காட்சியை நாம் காணமுடிகிறது. குஞ்சிற்கு ஊட்டுவது போன்ற ஒரு காட்சியை நாம் காண முடிகிறது. குஞ்சு தனது பொக்கை வாயைத் திறக்க தாய்ப்பறவை அதன் வாய்க்குள் ஏதோ ஒரு தானியத்தை ஆகாரமாக ஊட்டுகிறது. நமது மனதிற்கு ரொம்ப ரம்மியமான காட்சி இது.

**எலியா**, கேரீத் ஆற்றண்டையில் இருந்தபோது காகங்கள் மூலமாக போஷிக்கப்பட்டார். ஆற்று தண்ணீரினால் தாகம் தீர்க்கப்பட்டார். சில நாட்களுக்கு பின்பு கேரீத் ஆற்று நீர் வற்றியபோது சாறிபாத் விதவையின் மூலமாக பானையில் உள்ள மாவும் கலசத்தில் உள்ள எண்ணெய்யும் வற்றாமல் இருந்து எலியாவும் அந்த விதவையின் குடும்பத்தாரும் அற்புதமாக போஷிக்கப்பட்டார்கள்.

**சவுல்** ராஜாவினால் விரட்டப்பட்டபோது தாவீது அபிமேலக்கின் மூலமாக ஆலயத்திலிருந்த ஆசாரியர்களுக்காக வைக்கப்பட்டிருந்த அப்பத்தினால் அவனது பசி ஆறினது. கர்த்தர் தமது பிள்ளைகளை எப்படியாவது ஏதாவது வழியில் போஷிக்கிறார் என்ற உண்மை இங்கு வெளிப்படுகிறது.

**14 நாட்கள் தவறாமல் வந்து அட்டியில் முட்டை போட்ட கோழி :**

ஜெர்மனி தேசத்திலே ஜான் பிரெண்ஸ் என்ற ஒருவர் இருந்தார். இவர் மார்ட்டின் லூத்தரின் நண்பர். மார்ட்டின் லூத்தர் மூலம் ஏற்பட்ட மறுமலர்ச்சி நாடு முழுவதும் தீயைப்போல பரவிக்கொண்டிருந்த காலம் அது. அந்த நாட்டின் அரசன் 5ம் சார்லஸ் இந்த ஜான் பிடிரண்ஸை கைது பண்ணுவதற்காக ஒரு படையை அனுப்பினான். இதை கேள்விப்பட்ட ஜான் ஜெபித்தார்.

ஜெபித்தபோது ஆண்டருடைய வழி நடத்தல் இவ்வாறு வெளிப்பட்டது. கொஞ்சம் ரொட்டியை எடுத்துக்கொண்டு அடுத்த வீதிக்கு போ அங்கு ஒரு திறந்த கதவுள்ள வீட்டை பார்ப்பாய். அந்த வீட்டிற்குள் சென்று கூறைக்கு அருகேயுள்ள அட்டியில் படுத்துக்கொள்.

உடனே அவர் புறப்பட்டு திறந்த கதவுடன் இருந்த ஒரு வீட்டிற்குள் நுழைந்து அட்டியில் (அட்டாலியில்)படுத்துக்கொண்டார். ராஜா அனுப்பிய படைகள் இவரை தேடி தெருவில் நடக்கும் ஒலி அவர் காதில் விழுந்தது. அந்த அட்டியில் படுத்திருந்தபோது ஒவ்வொரு நாளும் ஒரு கோழி சப்தமில்லாமல் ஒரு முட்டையை போட்டுவிட்டுபோனது. இப்படியாக 14 நாட்கள் தவறாமல் கோழி வந்து அட்டியில் முட்டை போட்டது. 15வது நாள் அந்த கோழி வரவில்லை. வீதியில் பலர் அந்த படை ஊரைவிட்டு போய்விட்டது என்று பேசுவது இவர் காதில் விழுந்தது. பின்பு அவர் தனது 14 நாட்கள் அட்டியில் ஒளிந்துவாழ்ந்ததை சிறை வாசத்தை முடித்துவிட்டு கீழே இறங்கினார். உண்மையாகவே ஆண்டவர் இவரை தனது கரத்தை நீட்டி எவ்வளவு அருமையாக போஷித்திருக்கிறார் என்று பாருங்கள். **நான் இளைஞனாக இருந்தேன். முதிர் வயதுள்ளவனாக ஆனேன். ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையோ அல்லது அவன் சந்ததி பிச்சை எடுத்து திரிந்ததையோ கண்டதில்லை.**

## 5. பாதுகாக்கும் கரம் :

**என் ஆடுகளுக்கு நான் நித்திய ஜீவனை கொடுக்கிறேன். அவைகளை ஒருவனும் என் கையிலிருந்து பறிக்கமுடியாது.** (யோ 10:28)

இந்த ஆண்டு முழுவதும் ஆண்டவரது கரம் நம்மை சுற்றிலும் ஒரு பாதுகாப்பு வளையமாக இருக்கும். **உன்னை தொடுகிறவன் என் கண்மணியை தொடுகிறான்** என்ற ஆண்டவர் நமக்கு வாக்கு கொடுக்கிறார். இந்த புதிய ஆண்டில் நாம் இதுவரை சென்றிராத ஒரு புதிய பாதையில் நாம் நடந்து செல்லலாம். காரையோ, ஸ்கூட்டரையோ நாம் ஓட்டும் போது நமக்கு தெரிந்த ரோடாக இருந்தால் எங்கு பள்ளம் இருக்கும் மேடு இருக்கும் ஸ்பீட் Speed Braker எங்கே இருக்கிறது என்று நாம் அறிந்து வைத்திருப்போம். ஆனால் நாம் இதுவரை செல்லாத புதிய பாதையாக இருப்பின் சற்று அதிக கவனத்துடன் வாகனத்தை ஓட்ட வேண்டும்.

யாக்கோபு அப்பா வீட்டிருந்து வருங்கால மாமனாரால் வீட்டை நோக்கி பயணம் சென்ற போது பெத்தேல் என்ற இடத்தில் ஒரு இரவை கழித்தான். அப்போது அவன் ஒரு கணவு கண்டாள். ஆணடவர் அவனுக்கு முன்பாக தோன்றி பயப்படாதே. உன்னோடே நான் இருக்கிறேன். நீ எங்கே சென்றாலும் உனக்கு நான் காவலாய் இருந்து உன்னை சுகபத்திரமாக இங்கு திரும்பி வரச்செய்வேன். நான் உனக்கு சொன்னதை நிறைவேற்றி முடிக்கும் வரை நான் கைவிடமாட்டேன்

என்று கூறினார். ஆதி 28:15. அதுபோலவே நம்மையும் பார்த்து **இந்த ஆண்டு நீ போகும் இடமெல்லாம் நான் உனக்கு பாதுகாப்பு அளிப்பேன்** என்று கூறுகிறார். இஸ்ரவேலை காக்கிறவர் துங்குவதுமில்லை, உறங்குவதுமில்லை. உன் வலது பக்கத்தில் உனக்கு நிழலாய் இருக்கிறார். பகலில் சூரியனோ இரவில் சந்திரனோ உன்னை தீண்டாது. நீ வெளியே போகும்போதும் உள்ளே வரும்போதும் ஆண்டவர் உன்னை பார்த்துக்கொள்வார். ஆண்டவர் எப்படி நம்மை பாதுகாக்கிறார் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

**ஆண்டவர் அனுப்பிய அற்புத கேஸ் சிலிண்டர் :**

இரண்டாவது மகாயுத்தம் நடந்துகொண்டிருந்த காலம் அது. கேப்டன் ஜான்சன் பசிபிக் மகா சமுத்திரத்தின் சில பகுதிகளில் குண்டு வீசும் பணி அவருக்கு கொடுக்கப்பட்டது. அவரும் அவரின் இரண்டு சகாக்களும் விமானத்தில் புறப்பட்டு சென்று தங்களது பணித்தளத்தை நோக்கி பறந்து கொண்டிருந்தனர். திடீரென பெட்ரோல் இல்லாத காரணத்தால் விமானம் செயலற்று போய்கொண்டிருந்தது. வேறு வழியில்லாமல் ஏதோ ஒரு தீவில் விமானம் தரை இறங்கியது. எதிரிகள் 2 மைல் தூரத்தில் இருப்பதை இவர் அறிந்துகொண்டார். தான் தரை இறங்கியதை அதிஷ்டவசமாக எதிரி கவனிக்கவில்லை.

ஜான்சன் கேப்டனாக மாத்திரமல்லாமல் அவ்வப்போது போதகர் பணியும் ஆற்றி வந்தார். இந்த சமயத்தில் அவர்கள் தங்களுக்குள் இவ்வாறு யோசித்தார்கள். இப்படி ஒரு தீவில் மாட்டிக்கெண்டோமே என்ன செய்வது. நமது பணிதளமோ 400 கி. மீ. தொலைவில் உள்ளது. நம்மை சுற்றிலும் எல்லா பக்கமும் எதிரிகள் சூழ்ந்திருக்கிறார்கள். நமக்கோ பெட்ரோல் இல்லை. நாம் ஜெபித்தல் ஆண்டவர் பதில் கொடுப்பார் என்று அடிக்கடி நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள் என்ன செய்வது என்று கேட்டார். உடனே ஜான்சனும் மற்றவர்களும் முழங்கால் படியிட்டு ஜெபித்தார்கள். எப்படியோ இரவில் கொஞ்ச நேரம் தூங்கினார்கள். இரவு 2 மணிக்கு கேப்டன் ஜான்சன் எழுந்து ஜெபித்தார் அருகில் உளள் கடலுக்கு நடந்து போகும்படி ஆண்டவர் ஒரு உள்ளுணர்வு கொடுத்தார். அங்கு சென்றபோது என்ன ஆச்சரியம். கரையில் ஒரு **கேஸ்** சிலிண்டர் ஒன்று ஒதுங்கி கிடப்பதை கண்டார். உடனே அதை எடுத்துக்கொண்டு வந்து தனது விமானத்தை நிரப்பி சில மணிநேரத்தில் தங்களது பணிதளத்துக்கு பத்திரமாக வந்து சேர்ந்தார்கள்.

அந்த கேஸ் சிலிண்டர் இரசியம் பின்பு தான் தெரிந்தது. கடலில் கேஸ் சிலிண்டர்களை ஏற்றி சென்றுகொண்டிருந்த ஒரு அமெரிக்க கப்பல் தனது பாரத்தை குறைக்க கடலில் பல சிலிண்டர்களை தூக்கி எறிய ஒரு **சிலிண்டர்** இந்த ஜான்சன் இருந்த தீவிற்கு நேராக வந்து கரை ஒதுங்கியது.

ஆண்டவர் நமது ஜெபத்தை கேட்பது உண்மைதான். ஆனால் அவ்வளவு சீக்கிரமாக கேட்பார் என்ற கேப்டன் ஜான்சனும் அவரது சகாக்களும் எதிர்பார்க்கவில்லை. ஆம். நமது ஆண்டவர் நாம் நினைப்பதற்கும் சிந்திப்பதற்கும் நமது எதிர்பார்ப்பிற்கும் மேலாக அவர் கிரியை செய்ய வல்லவராய் இருக்கிறார். என்னை நோக்கி கூப்பிடு அப்போது நான் உனக்கு பதிலளித்து

உன்னால் எண்ணி பார்க்கமுடியாத மாபெரும் செயல்களை உனக்கு அறிவிப்பேன். (எரே 33:3) என்ற வசனம் இவர்களது வாழ்க்கையில் அப்படியே 100க்கு 100 நிறைவேறியது. இதுவரை இந்த புதிய ஆண்டில் ஆண்டவரது கரம் நமது வாழ்க்கையில் எவ்வாறு வழி நடத்தப்போகிறது என்ற செய்தியை சிந்தித்தோம்.

**முதலாவது வழிநடத்தும் கரம்.** இந்த 2018ம் ஆண்டின் ஆரம்பத்தில் இருக்கிற நம்மை ஆண்டவரது கரம் நம்மை வழிநடத்துவதற்கு காத்துக்கொண்டிருக்கிறது. பாபிலோனிலிருந்து முதலாம் மாதம் முதல் தேதியிலேயே எருசலேம்நோக்கி எஸ்ரா பயனம் செய்தபோது கர்த்தருடைய தயவுள்ள கரம் அவரை வழிநடத்தியது. இந்த பூலோக வாழ்க்கையில் பரம எருசலேமை நோக்கி பயணம் செய்துகொண்டிருக்கும் நம் ஒவ்வொருவரையும் கர்த்தருடைய அருட்கரம் நிச்சயமாக **வழிநடத்தும் என்பதில˙எவ்வித ஐயமும் இல்லை.**

**இரண்டாவது திடப்படுத்தும் கரம்** கர்த்தருடைய கரம் எருசலேமின் அலங்கத்தை கட்டிய நெகேமியாவோடு இருந்ததைபோல நாம் தற்சமயம் ஆண்டவருக்காக செய்யும் எல்லாவிதமான நற்பணிகளையும் நமது கரங்களை **கர்த்தருடைய கரம் திடப்படுத்தட்டும்,சோர்வுகள், களைப்புகள் எல்லாம் இந்த புதிய ஆண்டில் பறந்தோடிப்போகட்டும்.**

**முன்றாவது தாங்கும் கரம்.** நீதிமான் விழுந்தாலும் கர்த்தர் தமது பெலத்த கரத்தினால் அவனை தாங்குவார் தோல்வி ஏமாற்றம் பற்றாகுறை இவற்றினால் பாதிக்கபட்டு நீங்கள் விழுந்துகிடக்கிறீர்களா. **கர்த்தருடைய கரம் உன்னை தாங்கும் ஏற்கும் சுமக்கும் தீங்கு நாளில் உன்னை தமது கூடாரத்தில் மறைத்து வைத்து ஏற்ற வேலை வரும் போது உன் கன்மலையின் மேல் அவர் உயர்த்துவார்** சங். 27:5 இப்பொழுதே அவரை நோக்கி பார்.


**நான்காவது போஷிக்கும் கரம்.** அவர் தமது கரத்தினால் **அவரது ஆகாரத்தை உன் வாயில் தாய் பறவை தன் குஞ்சுக்கு ஊட்டுவதைபோல் அவர் உன்னையும என்னையும் போஷிப்பார். நான் இளைஞான இருந்தேன் முதீர்வயதையும் அடைந்தேன். நீதிமான் கைவிடப்பட்டதையோ அவன் சந்ததி பிச்சை எடுத்ததையோ நான் கண்டதேயில்லை** என்று தாவீதின் வார்த்தைகளை ஒருபோதும் மறக்காதீர்கள் இறுதியாக பாதுகாக்கும் கரம் நாம் ஆண்டவரது கரத்துக்குள் அடங்கியிருப்பதால்(1பேதுரு 5:6) **ஏற்ற காலத்தில் நம்மை உயர்த்துவது மத்திரமல்லாமல் அவரது பாதுகாக்கும் கரத்துக்குள் இருக்கிற நம்மை யாராலும் பறிக்கமுடியாது.** காரணம் கடவுள் நம்மைஅவரது உள்ளங்கையில் வரைந்து வைத்திருக்கிறார்.

**முதலாம் மாதம் முதல் தேதியிலேயே எஸ்ரா பாலிலோனிலிருந்து புறப்பட்டு ஐந்தாம் மாதம் முதல் தேதியிலேயே தேவனுடைய தயவுள்ள கரம் அவர்மேல் இருந்ததினால் எருசலேமிற்கு சுகப்பத்திரமாக வந்துசேர்ந்தான்.** (எஸ்ரா 7:9).

# ஆயர் பட்டம் கிடைத்தும்...

# ஆயர் தகுதி இழந்தவர்கள்

**திருநெல்வேலி** திருமண்டலத்தில் 21-12-2017 அன்று CSI மாடரேட்டரும் மத்திய கேரள டையோசிஸ் பிஷப்புமான **Most Rev. Thomas K. Oommen** அவர்களால் சுமார் 14 ஊழியர்களுக்கு **முழு பட்டம்** அளிக்கும் அபிஷேக ஆராதனை நெல்லை **தங்கம்மாள்புரம்** CSI ஆலயத்தில் வைத்து சிறப்பாக நடத்தப்பட்டது. முன்னாள் பிஷப் J.J. **கிறிஸ்துதாஸ்** அவர்களும் அந்த ஆராதனையில் பங்கெடுத்தார்.



அதன்பின் பட்டம் பெற்ற ஆயர்கள் அவரவர்களுடைய சபைகளில் ஆராதனை நடத்தியும் திருவிருந்து கொடுத்தும் முழுபட்டம் பெற்ற ஆயர்களாக பணியாற்றினார்கள். ஆனால் CSIயிலிருந்து பிரிந்த நெல்லை அத்யட்சாதீனம் நெல்லை திருமண்டலம் **Tirunelveli Diocese Trust Association**(TDTA) என்ற பெயரில் நெல்லை திருமண்டலத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். தங்களுடைய டிரஸ்ட் கம்பெனி சட்டப்படி முழு ஆயர் பட்டம் பெற்ற அந்த 14 ஆயர்களின் பட்டம் செல்லாது என்று அறிவித்தார்கள். உடனே சபையில் திருவிருந்து கொடுக்க புது பட்டம்பெற்ற ஆயர்களை அனுமதிக்கவில்லை. அவர்களின் சம்பளம் நிறுத்தப்பட்டது. வீட்டை காலி செய்ய கட்டளையிடப்பட்டார்கள். மேலும் அவர்கள் சபை செயல்பாடுகளிலிருந்து விலக்கி வைக்கப்பட்டார்கள்.

**பிஷப் J.J.கிறிஸ்துதாஸ்** அவர்களுக்கு ஏற்கனவே சம்பளம் நிறுத்தப்பட்டது. அவருக்கு கார் ஓட்டும் டிரைவர் சம்பளம் நிறுத்தப்பட்டது. பிஷப் வீட்டில் இயங்கிக்கொண்டிருந்த **பாலியல்நேசன்** அலுவலகம் இடமாற்றம் செய்யப்பட்டது என்றாலும் பிஷப் அவர்கள் தன் வீட்டை காலி செய்யவில்லை. 2018 மார்ச் மாதத்தோடு பிஷப் அவர்கள் ஓய்வுபெற வேண்டும்.

டிரஸ்ட் Bபோர்டு நிர்வாகிகளால் கம்பெனி சட்டப்படி புதிய பிஷப் தேர்ந்தெடுக்கப்படுவார். அப்போது அவர் தங்க பிஷப் வீடு தேவை! இப்படியாக தென் இந்தியாவில் மிகப்பெரிய டையோசிஸ்ஸான **திருநெல்வேலி அத்தியட்சாதீனத்தின்** நிலை பல புதிய பிரச்சனைகளோடு போய்க்கொண்டிருக்கிறது.

நிலைமையை சரிசெய்யவும் பேச்சுவார்த்தை நடத்தவும் மாடரேட்டர் **தாமஸ் கே.உம்மன்** அவர்கள் நெல்லை டையோசிஸ் அலுவலகத்துக்கு ஜனவரி மாதம் நேரில் வந்தார். TDTA நிர்வாகிகள் அவரை முற்றுகை இட்டு அலுவலகத்தில் நுழைய விடாமல் வேறு தனி அறையில் அவரை அமர்த்தி பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இந்த பேச்சுவார்த்தையை ஆயர்களின் புதிய அபிஷேக ஆராதனைக்கு முன்பே TDTA நிர்வாகிகளிடம் மாடரேட்டர் அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தியிருந்தால் பிரச்சனை இத்தனை மோசமாக போயிருக்காது.

## ஆயர்களின் இரண்டுங்கெட்டான் நிலை.

முழு பட்டம்பெற்ற ஆயர்களின் ஊழியம் இப்போது பெரும் கேள்விக்குறியாக இருக்கிறது. இவர்களின் **சம்பளம்** யார் கொடுப்பார்கள்?. இனி இவர்கள் அந்தந்த சபைகளில் ஊழியத்தை தொடர முடியுமா? CSI சட்டப்படி மாடரேட்டர் கொடுத்த **முழு பட்டம்** செல்லுபடியாகுமா? நெல்லை அத்தியட்சாதீனம் எப்போதோ தாங்கள் CSI லிருந்து பிரிந்துவிட்டோம் என்றும் இனி நாங்கள் CSI சபையினர் அல்ல. நாங்கள் TDTA சபையை சேர்ந்தவர்கள் என்று CSI சினாட்க்கு அறிவித்ததாக அறிந்தேன். அப்படியிருந்தும் ஆயர் அபிஷேக சடங்கை நடத்த CSI சினாட் முற்பட்டதேன்?

CSI மாடரேட்டர் அவர்களும், CSI சினாட் **Rev. பில்லி** அவர்களும் செய்த ஏற்பாட்டால் **அனாதைகளாக்கப்பட்ட** இந்த ஆயர்கள் இனி என்ன செய்ய போகிறார்கள்?. **வேலையில்லை, சபை இல்லை, வீடு இல்லை, சம்பளம் இல்லை.** இந்த நிலையில் இந்த 14 **ஆயர்களும்** திருநெல்வேலியில் எங்கு சென்றாலும் ஊழியம் செய்யமுடியாது. 14 ஆயர்கள் நிலை பரிதாபமாக அமைந்துவிட்டது.

# இலங்கை CSI சபைகளுக்கும் இரண்டு பிஷப்மார்

இலங்கை CSI சபைகளின் **பிஷப் தேர்தல்** நடத்தப்பட்ட விதம் இரவு நேரத்தில் நடத்தப்பட்ட **இரகசிய திருமணம்போல** ஒரே ராத்திரியில் மாடரேட்டர் அறைக்கு அருகில் உள்ள ஒரு அறையில் வைத்து பிஷப் சடங்கு நிறைவேற்றப்பட்டதாக கேள்விப்பட்டேன். அதிக ஓட்டுகளால் பிஷப் எலக்ஷனில் தேர்ந்தெடுக்கப்பட்ட **ஆயரை ஒதுக்கிவிட்டு** இந்த பிஷப் அபிஷேக(Consigration) சடங்கு நிறைவேற்றப்பட்டது. எதிர் அணியினர் நீதிமன்றம் சென்று Stay Order வாங்குவதற்கு இடங்கொடுக்காமல் இரவோடு இரவாக பிஷப் அபிஷேக சடங்கு அவசரமாக நடத்தப்பட்டது. Congregation ஒரு ஆயரை பிஷப் அபிஷேகம் செய்யவேண்டுமானால் இலங்கை CSI சபை மக்களுக்கு மூன்றுமுறை 3 வார ஆராதனையில் அறிவிக்க வேண்டியது அவசியம். அந்த ஒழுங்குகளை பின்பற்ற நேரம் இல்லாமல் CSI **சபைமக்கள்** புதிய **பிஷப்புக்காக** ஜெபிக்க நேரம் கொடுக்காமல், பிஷப் அபிஷேகம் நடத்திவைக்கப்பட்டது. அது அநியாயம் அல்லவா. நம் தெய்வம் அந்த அபிஷேக ஆராதனையில் சந்தோஷப்படுவாரா? இப்போது அதன் பலன் என்ன? இலங்கையில் CSI டையோசிஸ் **இரண்டாக உடைந்து இரண்டு பிஷப்மார் தலைமையில் சபைகளும் இரண்டு துண்டுகளாக** உடைக்கப்பட்டு இப்போது செயல்படுகிறது.

தோல்வியுற்ற ஆயர் அங்கீகாரம் பெற்ற ஒரு ஆங்கிலிக்கன் சபைகளின் ஆர்ச் பிஷப்பால் பிஷப்பாக அபிஷேகம் பெற்று 9 சபைகளுக்கு பிஷப்பாக செயல்படுகிறார். மற்ற பிஷப் அவர்கள் 14 CSI சபைகளுக்கு பிஷப்பாக செயல்படுகிறார்.

கடந்த இரண்டு மாதங்களில் இரண்டுமுறை இலங்கை கூட்டங்களில் பிரசிங்கித்து வந்தேன். 175வது ஆண்டு நிறைவு விழாவில் நான்கு நாட்கள் பிரசங்கிக்க ஆர்ச் பிஷப் அவர்களால் இலங்கைக்கு அழைக்கப்பட்டேன். அந்த நிறைவு விழா விசேஷ நிகழ்ச்சிக்கு இலங்கை ஆளும் கட்சி மந்திரிகள் அழைக்கப்பட்டிருந்தார்கள். புத்த பிட்சுகளின் தலைமை குரு அழைக்கப் பட்டிருந்தார். அந்த கூட்டங்களில் நான் பிரதான பிரசங்கியாராக அழைக்கப்பட்டிருந்தேன். அந்த சமயம் CSIயின் இரண்டு பிஷப்மார் வந்திருக்கிறார்கள் எனக்கு அறிவிக்கப்பட்டது. அப்போது தான் ஒரு CSIக்கு இரண்டு பிஷப்மார் எப்படி நிர்வாகம் செய்யமுடியும் என்று கேட்டபோதுதான் மேலே எழுதப்பட்ட தகவல்களை சேகரித்தேன். CSIயின் நிலை வெளிநாடுகளிலும் கொடிகட்டி பறக்கிறது. இது வேதனைதரும் செய்தியல்லவா?.

ஏறக்குறைய இந்தியாவில் திருநெல்வேலியிலும் இலங்கையை **பின்பற்றி இரண்டு பிஷப்மார்** தலைமையில் அருமையான நெல்லை அத்தியட்சாதீனம் **இரண்டாக உடைக்கப்படுமோ** என்று சபைமக்களும் சில **ஆயர்களும்** மிகவும் மனம்நொடிந்து தொலைபேசியில் என்னோடு பேசி கண்ணீர்விட்டு பகிர்ந்துகொண்டார்கள்.

இனி **முழுபட்டம் அபிஷேகம்பெற்ற** ஆயர்களில் கதி என்ன? பெரும்பான்மை சபை மக்களால் நடத்தப்படுகிற இப்போதுள்ள நிர்வாகிகளுடன் மாடரேட்டர் அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தியிருக்கவேண்டும். கலந்து ஆலோசிக்காமல் முன்னாள் பிஷப் அவர்கள் தன்னிச்சையாக செயல்பட்டார். புது பட்டம் பெற்ற ஆயர்களும் தற்போதைய நிர்வாக கமிட்டியுடன் கலந்து ஆலோசித்திருக்க வேண்டும். அப்படி செய்யாததால் டையோசிஸ்யிலிருந்து நீக்கப்பட்டார்கள். இந்த ஆயர்களுக்கு CSI மாடரேட்டர் அவர்கள் சினாட் பணத்திலிருந்து **மாத சம்பளமும், ஊழியம் செய்ய** சபையையும் காட்டி ஏற்பாடு செய்வார்களா? **பாதிக்கப்பட்ட இந்த ஆயர்கள்** கேட்கும் இந்த கேள்விக்கு CSI **சினாட்டும் மாடரேட்டரும்** பதில் சொல்லவேண்டுமே!. **நெல்லை திருமண்டலத்திற்காக** இன்னும் கூடுதல் ஜெபமும் உபவாச ஜெபமும் மிகவும் தேவை. அதுவும் மிக அவசரமான தேவையாக இருக்கிறது.

# SRI LANKA MEETING

## TRINCONMALLE

# இலங்கையில்
# வேதாகம விழிப்புணர்வு கூட்டங்கள்:



இலங்கையில் **திருகோணமலை** என்ற ஊரில் நடந்த வேதாகம விழிப்புணர்வு கூட்டங்கள் மிகவும் ஆசீர்வாதமாக நடந்தது. 2017 **நவம்பர்** மாதம் (இலங்கை) **கண்டி** என்ற மலைநாட்டில் நடந்த கூட்டம்போல இரண்டே மாதத்துக்குள் மறுபடியும் இலங்கையில் கடற்கரை நகரமாகிய **திருகோணமலை** என்ற இடத்தில் பெரிய மண்டபத்தில் நடந்த கூட்டங்கள் மிக சிறப்பாகவும் ஆசீர்வாதமாகவும் நடந்தேறியது.





இந்தியாவில் **Dr. Rev. தியோடர் வில்லியம்ஸ்** அவர்கள் **வேதாகம ஆராய்ச்சி கூட்டங்கள்** என்ற பெயரில் இந்தியாவில் முக்கிய மாநில தலைநகரங்களில் இக்கூட்டங்கள் நடத்தப்பட்டது **வேதாகம ஆராய்ச்சி கூட்டங்கள்** ஒரு கன்வென்ஷன் போல் அல்லாமல் **வேத வசன ஆராய்ச்சி** கூட்டங்களாக Bible Teaching கூட்டமாக நடத்தப்பட்டது மிகப்பெரிய வெற்றிபெற்றது.

டாக்டர் தியோடர் வில்லியம்ஸ், டாக்டர் சாம் கமலேசன், வேதநாயகம் சாஸ்திரியார், டாக்டர் புஷ்பராஜ் ஆகிய நாங்கள் இணைந்து அன்று நடத்தியது போல **திருகோணமலையில்** (இலங்கை) **வேதாகம விழிப்புணர்வு கூட்டங்கள்** என்ற பெயரில் வேத வசன அடிப்படையில் **வேத பாடம்** நடத்துவதைபோல கூட்டங்கள் நடத்தியது என்னை பிரம்மிக்க வைத்தது. பல்வேறு பெயரில் .பல்வேறு வித்தியாசமான உபதேசங்களை கொண்ட **சபை** தலைவர்கள், **போதகர்கள்** விசுவாசிகள்யாவரும் தங்கள் கேள்விகளை பேப்பரில் எழுதிகொடுக்க அதற்கு ஒவ்வொரு கூட்டத்திலும் **பதிலும்,** வசன **விளக்கங்களையும்** என் பிரசங்கத்தினூடாக அறிவித்தேன். கூட்டங்கள் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது.

கூட்ட ஏற்பாடுகளை செய்து என்னை அழைத்த சகோ. முரளி அவர்களுடன் ஏராளமான வாலிப தம்பிமார்கள், வாலிப பெண்கள் இரவும் பகலும் விளம்பரங்கள் செய்தும் அவர்கள் கூட்டங்களில் சீருடையில் நின்று அர்த்தமுள்ள பாடல்களை பாடியதும் கூட்டத்தில் கலந்துகொண்டுமக்களை **ஆர்பாட்டம் இல்லாமல்** உற்சாகப்படுத்தின. ஏராளமானவர்கள் மனந்திரும்பும் அனுபவத்தை பெற்றனர். பலர் வேத வசனத்துக் நேராக திரும்பி சாட்சியுடன் வாழ தீர்மானங்களை எடுத்தனர். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

ஏற்பாடுகளை ஜெபத்துடன் செய்த சகோ. முரளி அவர்களுக்கும். உடன் ஊழியர்கள் குறிப்பாக வாலிபர்கள் யாவரையும் வாழ்த்துகிறேன்.

எல்லா செய்திகளும் வீடியோ எடுக்கப்பட்டன. ●

# இஸ்ரவேல்

Selected: Mr.John Muthusamy

**"இஸ்ரவேலே!, நீ என் தாசன் நான் உன்னை உருவாக்கினேன், இஸ்ரவேலே நீ என்னால் மறக்கப்படுவதில்லை" ஏசா 44:21**

**இஸ்ரவேல்** நாட்டை புறக்கணிக்கவேண்டும் என்று பல்வேறு பகுதிகளிலும் போரட்டங்கள் நடந்துவருகின்றன. அப்படியென்றால் பட்டியலிடப்போகும் விஷயங்களையும் நீங்கள் புறக்கணிக்கவேண்டும் என்கின்றன. உலக ஆராய்ச்சியாளர்களின் அறிக்கைகள் இஸ்ரவேல் ஆதரவு அமைப்புகளான **இண்டேல், பென்டியம். செலரான் கம்ப்யூட்டர்.** பிராசசர் சிப்களை உங்களது **கனினி, மடிகணணி, நோட்புக்** போன்றவற்றிலிருந்து இஸ்ரவேல் என்ற பெயரை உலகம் நீக்கவேண்டிவரும். இவையாவையும் **உற்பத்தி** செய்வது இஸ்ரவேல்தான் புரட்சிகர கண்டுபிடிப்பாக கருதப்படும் (IVY Bridge) பிராசரை தயாரிப்பதும் **இஸ்ரவேல்தான்.**

**வின்டோஸ் XT** ஆபரேட்டிங் சிஸ்டம் இருந்தால் அதையும் நீக்கவேண்டும். காரணம் அதை கண்டுபிடித்ததும் இஸ்ரவேல்தான். **ஆன்டி வைரஸ், பயர்வால்** போன்றவற்றையும் அடுத்து அனைத்து மொபைல் போன்களையும் கண்டுபிடித்தது இஸ்ரவேல்தான். இந்த தொழில் நுட்பம் முதலில் இஸ்ரவேலில்தான் தோன்றியது. மொபைல் சிப் தொழில் நுட்பம் இஸ்ரேலிய நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு இன்று 100 மில்லியன் சாதனைகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. SMS அனுப்புவதையும் அதை முன்னேற்றியதில் இஸ்ரேலுக்கு பெரும்பங்கு உண்டு.

**4G சாதனங்களில்** பயன்படுத்தப்படும் **சிம்கள்** அனைத்தையும் இஸ்ரேலால் உருவாக்கப்பட்டவை. வாய்ஸ் மெயில் பதிவு செய்யப்பட்ட குரல்களையும் கண்டுபிடித்தது இஸ்ரவேல்தான். இணையத்தில் எதையாவது தேடுகிறீர்கள் என்றால் இஸ்ரேலிய தேடு பொறிதான் அதை கண்டுபிடித்து கொடுக்கும்.

**அச்சிடப்பட்ட தாள்களை வாங்கினால்** அதில் பயன்படுத்திய 50 சதவித மை இஸ்ரேல் தாயரிப்பாக இருக்கும். அதேபோல் வீட்டில் பொழுதுபோக்குவதற்காக **வீடியோ ஆன் டிமான்டு** மூலம் திரைப்படங்கள், விளையாட்டுகள் போன்றவை இவை இஸ்ரேலிய தொழில் நுட்பத்தால் உருவானவை ஆகும். **புத்தக தொழில் நுட்பமும் இஸ்ரேலுக்கு சொந்தமானது.** எலக்ட்ரிக் **காரையும் பயன்படுத்த அதற்கு சார்ஜ் செய்யும் பேட்டரி** இஸ்ரேலுடையது.

**சான்விட்ச்களில்** பயன்படுத்தப்படும் **செரி தக்காளிகள்** இஸ்ரேலில் விளைவிக்கப்பட்டவை. உலகம் முழுவதும் **தேனிக்கள் குறைந்து வருவதற்கு தீர்வு இஸ்ரேல்** கண்டுபிடித்திருக்கிறது. அதை பயன்படுத்தி தேனீக்களை பெருக்கி தேன் எடுத்து வருகிறார்கள்.

**இஸ்ரேலின் மிகப் பெரிய மருந்து நிறுவனமான TEVA ஏராளமான மருந்துகளை தயாரித்து** வருகின்றது. **புற்றுநோய்க்கு** மருந்து கண்டுபிடிக்கும் இஸ்ரேலிய விஞ்ஞானிகள் தான் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

**இஸ்ரேல் விஞ்ஞானிகள்** கண்டுபிடித்த சாதனத்தின் மூலமாகத்தான் **இன்சுலின்** அளவிடப்படுகிறது. இப்படி மருத்து துறையில் மட்டுமே ஆயிரக்கணக்கான பங்களிப்பை **இஸ்ரேல்** செய்து வருகிறது.

இஸ்ரேலின் **நீர் பாசன** தொழில் நுட்பத்தை பயன்படுத்தி விவசாயத்தில் ஈடுபடும் உலக நாடுகள் ஏராளம். ஆப்பிரிக்கா, சீனா, இந்தியா இந்தோனேசியா, நேபாளம் போன்ற பல நாடுகள் இந்த **பாசன தொழில் நுட்பத்தை** அதிகம் பயன்படுத்தி வருகின்றன. புறக்கணிக்க முடிவு செய்யும்முன் யோசித்து செய்யுங்கள் என்கின்றன இந்த அமைப்புகள். இஸ்ரவேல் என்னும் வனாந்திர மண்ணில் எல்லா காலமும் **மழைகாலம்,வெயில்காலம்,குளிர்காலம்** ஆகிய எல்லா காலத்தில் எல்லாவித பழ வர்க்கங்களும் பயிற் விதைகளும், விவசாய உரங்களும் விளைய செய்யும் ஒரே நாடு உலகத்தில் இஸ்ரவேல் நாடு மட்டுமே!. இந்த குட்டி நாட்டு யூதர்களுக்கு இத்தனை ஞானமும் கொடுத்தது **நம் கர்த்தரே** ஆவார்.

## இஸ்ரவேலை பற்றி பரிசுத்த வேதம் சொல்வது :

1. உபா. 32:29 **இஸ்ரவேலே** நீ பாக்கியவான். கர்த்தரால் இரட்சிக்கப்பட்ட ஜனமே உனக்கு ஒப்பானவன் யார்?
2. உபா. 4:6 அவைகளை 1 (வேத வசனங்களை) கைக்கொண்டு நடவுங்கள். ஜனங்களின் (உலக) கண்களுக்கு முன்பாக **பரிசுத்த வேதமே** உங்களுக்கு ஞானமும் விவேகமுமாய் இருக்கும் இந்த கட்டளைகளையெல்லாம் கைக்கொள்ளும் இந்த பெரிய ஜாதியே ஞானமும் **விவேகமுள்ள ஜனங்கள்** என்பார்கள்.
3. ஏசாயா 27:6 **இஸ்ரவேல் பூத்து காய்த்து உலகத்தை பல நாள் நிரப்பும் நாட்கள் வரும்.** (இப்போது அந்த நாள் வந்துவிட்டது)
4. சங். 72:18 **இஸ்ரவேலின் தேவனாய் இருக்கிற கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்** உண்டாவதாக. அவரே **அதிசியங்களை செய்கிறவர்** (சங் 68:8, 106:48, ஏசாயா 24:15, 52:12)
5. மத்தேயு 24:15 **வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன். கர்த்தர் இயேசு.**

## E-mail - இ-மெயில்

ஜாமக்காரன் ஜனவரி மாதம் வரவில்லை என்று சிலர் எழுதியிருக்கிறார்கள். ஆனால் அதில் உங்கள் விலாசத்தையும் உங்களுக்கு கொடுக்கப்பட்ட நம்பரையும், தொலைபேசி எண்ணையும் எழுதினால் உங்கள் விலாசத்தை லட்சக்கனக்கான விலாச பட்டியலில் தேடும் நிலை ஏற்படாது. ஆகவே இனி எழுதுபவர்கள் எத்தனை முறை எனக்கு பழக்கமானவர்களாக இருந்தாலும் உங்கள் முழு விலாசத்தை மனதில் வைத்துக்கொள்ளமுடியாது. ஆகவே இந்த விஷயத்தில் உங்கள் ஒத்துழைப்பை நாடுகிறேன். விலாசம் எழுதிய E-mailக்கு உடனே பதிலும் கிடைக்கும். ஜாமகாரனும் தாமதிக்காமல் அனுப்பிவைக்கப்படும்.

## சத்திய வசன வானொலி நிகழ்ச்சிகள்

ஒவ்வொரு வாரமும் திங்கள், செவ்வாய் ஆகிய இரு நாட்களில் Fபீபா வானொலியில் ஒலிப்பரப்பாகிறது. காலை 7-00 மணிக்கு மத்திய அலை வரிசையில் mw 873 khz மீட்டரில் ஒலிப்பரப்பாகிறது.

# CHRISTIAN UNION SANGAM CONVENTION KUNNAMKULAM (THRISSUR DIST)




சுமார் 37 வருடங்களுக்கு பிறகு கேரளத்தில் திருச்சூர் மாவட்டத்தில் பெரும்பாலன கிறிஸ்தவர்கள் வசிக்கும் ஊரான குன்னம்குளம் என்ற ஊரில் அனைத்து சபையினரும் இணைந்து நடத்திய இக்கன்வென்ஷனில் நான் பிரசிங்கித்தேன்.

1969ம் வருடம் முதல் இந்த ஊரில் அடிக்கடி கன்வென்ஷனில் பிரசங்கிக்க அழைக்கப்படுவேன். சுமார் 14 ஆயிரம் மக்கள் மைதானத்தில் கூடியிருக்க நான் பிரசங்கித்த அந்த கூட்டங்களில் கர்த்தர் பலத்த காரியங்களை என்னை கருவியாக்கி ஒவ்வொரு முறையும் நடப்பித்தார். அவைகளை நினைவுக்கூர்ந்து தேவனை துதிக்கிறேன். இரண்டு தலைமுறைகள் கடந்து இப்போது புதிய தலைமுறையினர் இக்கூட்டங்களை ஜெபத்துடன் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கின்றனர்.

கூட்டத்தில் **மார்தோமா சபை** தலைமை ஆயர்.Rev.Pradish Oomman அவர்கள் தலைமை தாங்கி ஜெபித்து ஆரம்பித்து வைத்தார். Rev.Abraham Cheriyan(மார்த்தோமா சபை) அவர்களும் Rev,P.J.Thomas, CSI Cochin Diocese முன்னின்று அனைத்து நாட்களும் கூட்டங்களை நடத்தினார். 1941ம் வருடம் ஆர்த்டாக்ஸ் சபையை சேர்ந்த Mr.VI.Varghese (எ) வடக்கன் உபதேசி என்பவர் பொருப்பெடுத்து தொடங்கிய கன்வென்ஷன் இது என்று கூறி அந்த ஊர் கிறிஸ்தவர்கள் பெருமைக்கொள்கிறார்கள். **இந்த உபதேசியார் கத்தோலிக்கர்களைப்போன்ற** உபதேசம் கொண்ட ஆர்த்டாக்ஸ் சபையை சேர்ந்தவராக இருந்தாலும் **இரட்சிப்பின் சுவிசேஷ பாரம் கொண்டவர்களாகும்.** கன்னி மரியாளுடன் இவர்கள் வேண்டுதல் செய்யாமல், **மரித்தவர்களுக்காக** ஜெபிக்காமல், மரித்த பரிசுத்தவான்களோடும் ஜெபம் செய்யாது வசனத்தின்படி வாழ்பவர்களாகும். அதே சமயம் இவர்கள் தங்கள் **சபையைவிட்டு மாறாமல்** வசனத்தின்படி தன் உபதேசத்தின் மூலம் இவர்களை வழி நடத்தும் **பழைய கால அந்த ஊழியர்** தொடங்கிய இந்த கன்வென்ஷன் இப்போதும் சுமார் 76 வருடமாக நிறுத்தாமல் நடந்துக்கொண்டிருப்பது இக்கூட்டத்தின் சிறப்பு ஆகும். கூட்டம் மிகவும் ஆசீர்வாதமாக நடந்து முடிந்தது. கர்த்தருக்கே மகிமை உண்டவதாக.

# Tribal Mission Hospital கூட்டம்

## Bethani (Anaikatti) Medical Centre






**ஆனைக்கட்டி** (Coimbatore District)ல் ஆதிவாசிகளுக்கென்று கட்டப்பட்ட **பெத்தானி மெடிக்கல் சென்டர்** ஆஸ்பத்திரியில் புதிதாக கட்டப்பட்ட **ஆடிட்டோரியத்தில்** ஆஸ்பத்திரி டாக்டர்கள் செவிலியர் மற்றும் அனைத்து ஆஸ்பத்திரி,பள்ளிக்கூட அலுவலர்களுக்காக திடீரென்று கூட்டப்பட்ட இந்த கூட்டத்தில் **டாக்டர்.முரளிதர்** அவர்கள் வரவேற்பு உரை வழங்கினார். நான் கர்த்தருடைய செய்தியை பகிர்ந்துகொண்டேன். ஆஸ்பத்திரி டாக்டர்கள் மற்றும் தொழிலாளர்கள் அனைவருக்கும் **ஆனைக்கட்டி ஆஸ்பத்திரி தோன்றிய விவரம்**, வந்த எதிர்ப்புகள், **டாக்டர்.முரளிதர்** அவர்களின் தியாக முயற்சி ஆகியவைகளை குறித்து பகிர்ந்துகொண்டேன். கர்த்தரின் நாமம் மகிமைப்பட்டது.

Dr.முரளிதர் அவர்களின் பெரும் முயற்சியால் சிறிய அறையில் ஆரம்பிக்கப்பட்ட மருத்துவ பணியோடுள்ள சுவிசேஷ ஊழியம் இன்று மிக பிரம்மாண்டமாக ஏராளமான கட்டிடங்களுடன் சுமார் 9 டாக்டர்களுடன்,Dr.முரளிதர் அவர்கள் ஆதிவாசி மக்களுக்கு ஆப்ரேஷன் முதல் சகலமும் **இலவசமாக** சிகிச்சை செய்து சிறப்பான ஊழியத்தை பெரும் **பணதேவைகளோடும் மிக சிரமங்களுக்கிடையிலும்** மனம்தளராது ஊழியத்தை நிறைவேற்றும் Dr.முரளிதர் அவர்களுக்காக விசேஷ ஜெபம் ஏறெடுப்போம். இந்த ஆஸ்பத்திரி தொடங்க **நான் எப்படி காரணமானேன்.** வெற்றிடமாக இருந்த வெறும் நிலத்தை எப்படி ஆஸ்பத்திரியாக **ஆரம்பிக்க காரணமானேன்.** அதற்கான **என் ஆரம்ப முயற்சிகள் என்ன?** ஆஸ்பத்திரி ஆரம்பிக்கப்பட்டபின் நானும் Dr.முரளிதர் அவர்கள் அனுபவித்த போராட்டங்கள், RSS தீவிரவாதிகளால் உண்டான பிரச்சனைகள்,மத்திய மந்திரி முதல் கலெக்டர்வரை நடத்திய விசாரணை அதன் முடிவு ஜெயமானது ஆகியவை களையும்,**ஆதிவாசி பிள்ளைகளுக்கு** Dr.முரளிதர் அவர்களின் பெரும்முயற்சியால் தொடங்கப்பட்ட மெட்ரிக்குலேசன் பள்ளிக்கூடம் அதற்கான அரசாங்க அங்கீகாரம் பெற்றது ஆகியவை ஒரு நீண்ட சரித்திரமாகும். நேரம் கிடைக்கும்போது அத்தனையும் எழுதுவேன். அத்துடன் Tribal Mission ஊழியத்தை **நான் எப்படி தொடங்கினேன்** என்ற **சரித்திர சம்பவங்களையும்** எழுத கர்த்தர் அருள்புரிவாராக.

# CSI Madurai Diocese (Nagamalai Pudukottai )


# St. Andrus CSI Church Convention




இங்கு நடந்த கூட்டங்களில் ஆவியானவரின் கிரியைகள் மிகவும் அதிகமாக நடைபெற்றதை உணர்ந்தேன். மக்கள் வசனத்தை கேட்டும், வசனத்தை அறியும்வாஞ்சை எல்லோருடைய உள்ளத்திலும் இருப்பதை அறிந்து தேவனை துதிக்கிறேன், **தேனி, கம்பம், மதுரை பசும்மலை** உசிலம்பட்டி மற்றும் பல்வேறு சபைகளிலிருந்தும் மக்கள் ஒவ்வொரு நாளும் கூட்டங்களில் பங்குபெற்று ஆசீர்வாதம் பெற்று சென்றார்கள்.

சனிக்கிழமை பகல் ஆலோசனை ஜெப நேரம் காலை தொடங்கி மாலை 4-30 மணிவரை நீண்டு போயிற்று. வசன கேள்விகள் குடும்ப பிரச்சனைகள் யாவையும் மக்கள் நம்பிக்கையோடு பகிர்ந்துகொண்டு ஜெபித்து சென்றார்கள். சபை ஆயர் Rev. D. Robert அவர்களோடு சபை நிர்வாகிகள் இக்கூட்ட ஏற்பாடுகளை மிக நல்ல முறையில் செய்திருந்தனர். கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.

# Rev.Dr.விக்டர் ஞானராஜ் அவர்கள் மரித்துப்போனார்:



என் பழைய நண்பரும் பெங்களூர் FEBA வானொலி நிலையத்தில் 1964ம் வருடம் மக்கள் தொடர்பு அதிகாரியாக பணியாற்றிய காலத்தில் **Rev.ஆப்பில்பீ** என்ற வெள்ளைக்கார மிஷனரி அவர்கள் **நற்செய்தி** என்ற பெயரில் நடத்திய வானொலி நிகழ்ச்சிகளில் வாரம் ஒரு செய்தியளிக்கவும் **வருகையின் தூதன்** என்ற பிரபல பத்திரிக்கையின் உதவி ஆசிரியருமான சகோ.DT.ராஜா அவர்கள் **வாலிபர் விருந்து** என்ற தலைப்பில் தொடர்ந்து நடத்திய **வானொலி நிகழ்ச்சியிலும்** செய்திகள் கொடுக்க நான் அடிக்கடி பெங்களூரில் உள்ள FEBA ரெக்கார்டிங் ஸ்டுடியோவுக்கு சென்று வருவேன். அப்போது எங்களுக்குள் ஏற்பட்ட பழக்கம் நட்பு ஆழமானது. நல்ல வேதஞானம் உள்ளவர், வேதாகம படிப்பில் பல பட்டங்கள் பெற்றவர்.

1971ம் ஆண்டில் சகோ.DGS.தினகரன் அவர்கள் தானும் வானொலியில் செய்திகள் கொடுக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு உதவும்படி என்னிடம் கூறினார். ஒருநாள் சகோதரனை FEBA நிலைய தலைவரிடம் நானே நேரில் அழைத்துச்சென்று அறிமுகப்படுத்தினேன். **சகோ.விக்டர்ஞானராஜ்** அவர்களும்கூட இருந்தார். வாரம் ஒரு செய்தி வீதம் 6 மாத செய்திகள் பதிவு செய்யப்பட்டது. அப்போதெல்லாம் DGS.தினகரன் தான் பேசும் பொதுகூட்டங்களில் மரித்தவர்களைப்பற்றி கூட்டத்தில் பேசுவார். அந்த காலங்களில் **ஜெபத்தில் பெயர் அழைக்கும்** தவறான ஊழியத்தை தொடங்க ஆரம்பிக்கவில்லை. அப்படிப்பட்ட காலங்களில் நானும், சகோ.விக்டர்ஞானராஜ் அவர்களும், சகோ.தினகரன் பிரசங்கம் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் செத்துப்போனவர்களைப்பற்றி கூட்டத்தில் கூறுவது தீர்க்கதரிசனம் கூறுவது, அந்நியபாஷை பேசுவது ஆகிய இவைகளைக்குறித்து தவறு என்று வேத ஆதாரத்தோடு பேசி சகோ.தினகரன் அவர்களில் இப்படிப்பட்ட ஊழியம் தவறு என்று முதன்முதல் என்னிடம் மனபாரத்துடன் பகிர்ந்துக்கொண்டார். அடுத்தது **பாஸ்டர்.ஜீவானந்தம்** (மகிழ்ச்சி) ஆசிரியர் அவருக்கும் வானொலியில் பேசும் ஆசை வந்தது. உடனே அவர் என்னிடம் அணுகினார். அவரும் FEBA மூலம் 6 மாதம் தொடர்ந்து அவர் பிரசங்கம் வெளிவர ஏற்பாடு செய்தேன். ஆனால் அவர் பிரசங்கத்தில் பிரச்சனைக்குறிய விஷயங்கள் ஏராளம் இருந்தது.

அந்த காலத்தில் ஒவ்வொரு பிரசங்கமும் **மானிட்டர் செய்வார்கள்** அதற்கென்று ஒரு நபர் தனி அறையில் அமர்ந்து எல்லாருடைய பிரசங்கத்தையும் விசேஷ கருவி மூலம் ஒன்றுவிடாமல் கேட்பார். அதில் **உபதேச பிரச்சனை,அந்நியபாஷை** போன்ற விஷயங்கள் வந்தால் உடனே என்னிடம் கூப்பிட்டு சொல்வார்கள். உடனே உங்கள் சட்டப்படி நீங்கள் தாராளமாக அவைகளை எடிட் செய்து குறிப்பிட்ட வார்த்தைகளை நீக்கிவிட்டு ஒலிப்பரப்பலாம் என்றேன். அப்படியே சகோ.தினகரன் பிரசங்கத்திலும் வேத வசனத்துக்கு முரண்பாடான சில வார்த்தைகளை வெட்டி நீக்கி வெளியிட்டனர். **பாஸ்டர்.ஜீவானந்தம்** செய்தியில் **முட்டிபோட்டு** ஜெபிக்காத யாருடைய ஜெபத்தையும் கர்த்தர் கேட்கமாட்டார் என்று பேசிவிட்டார். உடனே FEBA நிலையத்தினர் என்னிடம் தொலைபேசியில் அழைத்து **ஆஸ்பத்திரியில்** உள்ள வியாதியஸ்தர்கள், வீட்டில் கால் மடக்க இயலாத வயது முதிர்ந்தோர் யாவரும் இவர் பிரசங்கத்தை கேட்டால் **முட்டிபோடாமல்** ஜெபிக்கிற தங்கள் ஜெபத்தை கர்த்தர் கேட்கமாட்டாரோ என்ற சந்தேகம் அவர்களுக்கு ஏற்பட்டு வருத்தப்படுவார்களே! என்றார்கள். உடனே நான் பாஸ்டர் அவர்களின் உத்தரவு பெறாமலே

நீங்கள் அதை வெட்டி நீக்கி எடிட் செய்து ஒலிபரப்புங்கள் என்றேன். அதன்பிறகு FEBA நிலைய நிர்வாக குழு பாஸ்டர்.ஜீவானந்தம் அவர்களின் பிரசங்கத்தை வானொலியில் ஒலிபரப்புவதை நிறுத்திவிட்டனர். இப்படி வசனத்துக்கு விரோதமான உபதேசங்கள் யார் பிரசங்கித்தலும் அதை நீக்கி தெளிவான வேத வசன செய்திகளை மட்டும் வெளியிட்ட நல்ல ஸ்தாபனத்தில் வளர்ந்த சகோ.விக்டர்ஞானராஜ் அவர்கள் FEBA வானொலி ஊழியத்தைவிட்டு விலகி சொந்தமாக ஒரு பெந்தேகோஸ்தே சபையை திருச்சி நகரில் ஆரம்பித்தார். அதன்பின் இலங்கையை சேர்ந்த **KIRBY DE LANEROLLE கிர்பி டி லானரோர்** என்பவரின் கள்ள உபதேசத்தை கற்றுக்கொண்டார். தூதர்கள் தினசரி இவர் வீட்டுக்கு வந்துப்போவதாக பொய் கதைகளை அறிவித்தார். அந்த தூதன் காலை உணவுக்கு இட்லி வாங்கி வை என்று கூறி போவாராம். வாசகர்கள் இந்த இட்லி விஷயத்தில் கொஞ்சம் யோசித்துப்பாருங்கள். மனைவிக்கு தெரியாமல் ஆப்பத்தை திருட்டுதனமாக எடுத்து சாப்பிடும் **தூதர்கள்** யாராக இருப்பார்கள்?, திருச்சி ஓட்டல் இட்லி சாப்பாட்டும் **தூதன்** யாராக இருப்பார்கள் நீங்களே கற்பனை செய்து பாருங்கள்!.

இவைகளையெல்லாம் குறிப்பிட்டு எச்சரித்து என் வழக்கப்படி அவருக்கு கடிதமாக எழுதினேன். திருந்தவில்லை. ஜாமக்காரனில் அவரின் பிசாசின் உபதேசத்தை குறிப்பிட்டு வாசகர்களை எச்சரித்தது அதனால் அவருக்கு என்மேல் மகா கோபம் வந்தது. எங்கள் நட்பு முறிந்தது.

**வருந்துகிறேன்: சகோ.விக்டர்ஞானராஜ்** அவர்களின் மரணத்தின் சமயத்தில் அவர் குடும்பத்தினருக்கும் அவர் சபையினருக்கும் ஆறுதல் கூறவேண்டிய நான் அவரின் 1965ம் வருட ஆரம்பகால நண்பருமான நான், விக்டர்ஞானராஜ் அவர்களை **அவமானப்படுத்தும்** வகையில் எழுதியதற்காக சகோதரரின் **குடும்பத்தினருக்கும்,சபையினருக்கும்** வருத்தம் தெரிவிக்கிறேன். இந்த சமயத்தில் இவரின் நல்ல விஷயங்களை எழுத ஆரம்பித்து அவரை அவமானப்படுத்தும்படியான அவருடைய ஊழிய தவறுகளையும் எழுத நேர்ந்தது எனக்கு வருத்தமாகத்தான் இருக்கிறது. ஆனால் இந்த சமயத்தில் இவைகளை எழுதி அறிவிக்காமல் போனால் கள்ள ஊழியர்களை வாசகர்களோ சகோ.விக்டர்ஞானராஜ் அவர்களின் சபையினரோ அடையாளம் கண்டுபிடிக்கமுடியாமல் போகும். தமிழ்நாட்டில் இவரைப்போலவே **ஆலன்தாமஸ், சார்லஸ் ஆபிரகாம், சகோ.பால்தினகரன்,ஆலன்பால் ஆசீர்வாதம் டிவி,ஏஞ்சல் டிவி** இன்னும் ஏராளமானவர்களின் தவறான ஊழியத்தை வாசகர்களாகிய நீங்கள் இனம் கண்டு கொள்ளமுடியாமல் போகும். இப்படிப்பட்ட ஊழியர்களிடம் நீங்கள் ஜாக்கிறதையாக இருக்கவே இதை எழுகிறேன்.

சகோ.விக்டர்ஞானராஜ் அவர்களின் மரணம் மேலே குறீப்பிட்ட சில ஊழியர்களுக்கும் நான் குறிப்பிடாத இன்னும் பல **கள்ள ஊழியர்களும் இவர் மரணம்** ஒரு பாடமாக அமையும். சிலருக்கு **கர்த்தர் கொடுக்கும் தண்டனை நியாயதீர்ப்புக்கு முந்திக்கொள்ளும்** என்று வேதம் கூறுகிறது. இவர்களை வளரவிட்டால் இன்னும் பல விசுவாசிகள் வசனத்தை விட்டு விலகிவிடநேரும் என்பதற்காக சீக்கிரமே இதுபோன்ற மரணத்தை கர்த்தர் அனுமதிக்கிறார்.

பவுல் கூறுவதைப்போல் **ஆவியில் ஆரம்பித்து மாம்சத்திலா முடிக்கிறீர்கள்?** சகோ.விக்டர் ஞானராஜ் வாழ்க்கையும் அப்படிப்பட்டதுதான். **ஆரம்பம் மிக நன்றாக வசனத்தின்** அடிப்படையில் இருந்தது. ஆனால் முடிவு மிக பரிதாபம். அப்படியே **சகோ.DGS.தினகரனின் ஆரம்ப கால ஊழியம் அற்புதத்திலும் அற்புதம்.** ஆனால் முடிவு மிகப்பரிதாபம். தன் வியாதியில்

சித்திரவதைப்பட்டார். **இருதய ஆப்ரேஷன்** இரண்டுமுறை நடந்தது. ஆனால் சரியாக இயங்கவில்லை. பேஸ்மேக்கர் பல முறை இயங்காமல் திரும்பதிரும்ப மாற்ற வேண்டிவந்தது. அந்த கருவிதான் அவர் இருதயத்தை கடைசிவரை இயங்கவைத்து அவர் ஆயுளையும் நீட்டியது. கிட்னி ஆப்ரேஷன் இரண்டுமுறை நடந்தது. ஆனால் எல்லாம் தோல்வியில்தான் முடிந்தது.

**மகள் கார் விபத்து மரணம்** பேரிடியாக விழுந்தது. ஆனாலும் **காருண்யா** கல்லூரியைவிட்டு **கிறிஸ்துவின் முழுமையான** பணிக்கு திரும்பவில்லை. **காருண்யா நிகர்நிலை** பல்கலைகழகமாக மாற்ற அவர் இந்துமத மடாதிபதியின் காலில் விழவேண்டி வந்தது. அதோடு காருண்யாவை பணிய கோடிக்கணக்கான பணத்துக்காக அவர் **ஏராளமான பொய்களை** அள்ளிவிட்டார். **தங்க சாவி திட்டம், உடன்படிக்கை பெட்டியில்** பெரிய பணக்காரர்களின் கம்பெனி பத்திரங்களை வைத்து ஜெபிப்பது அதன்மூலம் பல கோடிகள் பெருகும் என்று கர்த்தர் சொன்னார் என்று இவர் கூற, அதற்கு சில முட்டாள் **பிஷப்மார்** சாட்சியளித்தார்கள். ஆனாலும் பணக்கார முதலாளிகள் **தங்கள் பத்திரத்தை** வீட்டைவிட்டு வெளியே எடுக்க தயங்கினார்கள். அவைகளை பேங்க் லாக்கரில் வைப்போமே தவிர, சகோ.தினகரனின் உடன்படிக்கை பெட்டியில் வைக்கமாட்டோம் என்று தங்களை ஜாக்கிறதைப்படுத்தி கொண்டார்கள். அந்த திட்டமும் படுதோல்வியில் முடிந்தது. தங்க சாவியை பல லட்சங்கள் கொடுத்து வாங்கிய முதலாளிகள் தாங்கள் அமரும் அலுவலகத்தின் ஆசனத்தின்மேல் ஆனி அடித்து அந்த சாவியை தொங்கவிட்டால் செல்வம் கொழிக்கும் என்று சகோ.தினகரன் கூறியபோது ஒரு சிலர் திருப்பதியை நம்புவதைபோல அதையும் நம்பினார்கள். அத்தனை பேரும் இப்போது அந்த **தங்கசாவியை** தூக்கிவிட்டார்கள்.

● **இளம்பங்காளர் திட்டம்** ஒரு குழந்தைக்கு 2000 கொடுத்தால் 25 வருடத்துக்கு அவர்களுக்கு **நோய் வராது, விபத்து வராது** நான் 25 வருடங்கள் அந்த பிள்ளைகளுக்காக ஜெபம் ஏறெடுப்பேன் என்றார். ஆனால் அந்த திட்டத்தை தொடங்கி 8வரு வருடத்திலேயே வியாதி படுக்கையில் விழுந்தார். மரித்தும்போனார். இப்போது மகன் **பால்தினகரன்** அவர் குடும்பத்தினர் **இளம்பங்காளர்** திட்டத்தை தொடர்ந்து நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள். சகோ.தினகரனுக்கு ஏற்பட்ட தோல்வியும் முடிவும் இந்த சந்ததிகளும் சொந்த வாழ்க்கையில் அனுபவிக்கும்போதுதான் உணருவார்கள். இப்போதே தங்கள் பிள்ளைகள் இரண்டு பேர்களை பற்றிய வதந்திகளை அறிந்து அவைகளை தாங்க முடியாதவர்களாய் பிள்ளைகளை சாட்சி கொடாமல் பாதுகாக்க **கனடாவுக்கு** இடம் பெயர்ந்தார்கள். பிள்ளைகளிடம் சத்தியம் வாங்கிய பின் மறுபடியும் பிள்ளைகளை இந்தியா கொண்டு வந்தார்கள் என்று கேள்விப்படுவது வேதனை தருகிறது. !

**இயேசு அழைக்கிறார்** ஊழியம் மூலமாக ஏராளமனாவர்களிடம் வசூலித்த **கோடிக்கணக்கான ரூபாய்களை** கொண்டு வாங்கிய **பேரீஸ் கட்டிடம்**(சென்னை ஹைகோர்ட் அருகே) இப்போது விலை பேசப்படுகிறது. ஊழியத்துக்காக வாங்கிய கட்டிடம் பல கோடிகளுக்கு விற்கப்பட்டால் இதற்கு ஜெபித்து காணிக்கை கொடுத்தவர்களுக்கு என்ன பதில் சொல்லபோகிறார்கள்?. அப்படியே காருண்யாவை சில வருடத்துக்கு முன்பே விலை பேசியவரை நானும் நன்றாக அறிவேன். விலை கட்டுப்படியாக வில்லை- பிரபல தமிழ்நாட்டு திராவிட கட்சிகளில் ஒன்றான குடும்பத்தினர் அதை வாங்க முடிவுசெய்து ஒப்பந்தம் ஆகும் நேரம் **சுப்ரீம் கோர்ட்** வழக்கு பயமுறுத்தி வாங்கும் திட்டம் கைவிடப்பட்டது.

கர்த்தர் காட்டிய இடம் என்று கோவையில் வாங்கிபோட்ட **காருண்யாவும்** அதை சுற்றியுள்ள மலை சார்ந்த இடமும் **பிளாட் போட்டு** கொஞ்சம் கொஞ்சமாக விற்க ஆரம்பித்துவிட்டனர். இப்போது ஊழியத்தோடு **ரியல் எஸ்டேட்** வியாபாரமும் அமர்களாமாக நடக்கிறது.

இவைகள் யாவற்றையும் கர்த்தர் கவனித்துக்கொண்டிருக்கிறார். மக்கள் ஏமாற்றப்படுகிறதையும் கர்த்தர் கவனித்துக்கொண்டிருக்கிறார்.

**ஆவியானவர் மனிதனோடு எப்போதும் போராடுவதில்லை. எல்லாவற்றுக்கும் ஒரு முடிவு உண்டு.**

பாஸ்டர்.விக்டர்ஞானராஜ் அவர்களின் ஆத்மா இப்போது எங்கே போயிருக்கும்?. மேலே குறிப்பிட்ட ஊழியர்கள் இதை சிந்தித்தால் போதும், தங்கள் மரணத்துக்குமுன் அவர்கள் திருந்த அல்லது தங்கள் பிழையான ஊழியத்தை திருத்திக்கொள்ள கர்த்தர் நல்ல நாட்களை தந்திருக்கிறார். இவர் கூட்டத்தில் அற்புதங்கள் நடப்பதாக சாட்சிகளை காட்டுகிறார்கள். இந்த விதமான அற்புதங்களுக்கு பின்னே யார் இருக்கிறார்கள்? கர்த்தரா? அல்லது சாத்தானா?.

தினமும் காலையில் மனைவிக்கு தெரியாமல் ஆப்பம் - தேங்காய் பால் சாப்பிட்டு போகும் தூதன் யார்? நிச்சயம் காபிரியேல் அல்ல, மிகாயேலும் அல்ல? பிறகு யாராக இருக்கும்?

இனி இவர் சபை மக்களின் நிலை என்ன? பாஸ்டர்.விக்டர் ஞானராஜ் அவர்களின் அதே பிழையான உபதேசத்தை தொடர அவர் மனைவி அனுமதிப்பாரா?

(ZFT) Zion Faith Tabarnaele **சீயோன் விசுவாச கூடாரம்** என்ற இவர் சபை மக்களை கர்த்தர் உணர செய்து வசனத்தில் வளர உதவுவாராக. ஜெபிப்போம்.

**வரவேற்கிறோம்! வாழ்த்துகிறோம்!!**



வடஇந்திய திருச்சபைகளுக்கு (CNI- CHURCH OF NORTH INDIA) புதிய மாடரேட்டராக வடஇந்தியாவில் உள்ள **ஜபல்பூர்** CNI டையோசிஸ் பிஷப் ஆக பணியாற்றிய **Rev.Dr.பிரேம்சிங்** அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார். இவர் இந்தியா அனைத்து திருச்சபைகளின் ஆலோசனை மன்றத்தின் (NCCI) தலைவராக இப்போதும் சேவை செய்வது அறிந்ததே CNI சபைகளின் புதிய மாடரேட்டர் Most Rev.PREMSINGH அவர்களை ஜாமக்காரன் சார்பில் நாம் வாழ்த்துகிறோம்.

CNIயின் உதவி மாடரேட்டராக தெரிந்தெடுக்கப்பட்ட **துர்காபூர் டையோசிஸ்** Rt.Rev.PRABUL KANTHTOTHATHA அவர்களையும் வாழ்த்துகிறோம். கிறிஸ்தவர்களுக்கு குறிப்பாக **மிஷனரி பணிதளத்துக்கு** அதிக பிரச்சனைகள் இந்துமத தீவிரவாதிகளால் பாதிக்கப்படும் பாகமான வடஇந்திய பிரதேசங்களுக்கு மாடரேட்டராக பொருப்பேற்கும் Most Rev.PREMSINGH அவர்கள் மூலமாக இந்திய அரசாங்கத்தை ஆளுகிறவர்கள் கண்களில் தயவுபெற்று கிறிஸ்தவ ஊழியங்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளை தீர்த்துவைக்க உதவியாக இருக்க கர்த்தர் அவருக்கு ஞானத்தை தந்து ஆலோசனை தந்து உதவுவராக. ஜெபிப்போம்.



## குவைத் (அரேபியா) CSI சபை கன்வென்ஷன்:

**நாடு : குவைத் - KUWAIT**
**இடம் : St.JOHNS TAMIL CSI CHURCH**
**நாள் 2018 ஏப்ரல் 26,27 மற்றும் 28 ம் தேதி வரை மட்டும்**
**மேலும் விவரங்களுக்கு தொடர்புக்கொள்ள: CSI Secreatary Mr.Selvin Muthunayagam, Ph. +965 99840794, Email.stjohnschurchkuwait@gmail.com**

குவைத் மலையாள CSI சபை விசுவாசிகள் என்னிடம் தனியாக **ஆவிக்குரிய ஆலோசனைகளை** கேட்க, **பிரச்சனைகளுக்காக, வியாதிகளுக்காக** ஜெபிக்க **செயலர்** அவர்களிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு சந்திக்கும் நாள்,நேரம்,இடம் ஆகியவைகளை கேட்டு அறிந்துக்கொள்ளவும்.

பெஹரின்,துபாய், ஷார்ஜா,அபுதாபி,மஸ்கட், தோஹா(கட்டார்) ஆகிய இடங்களில் உள்ளவர்கள் கூட்ட ஏற்பாடு செய்ய விரும்பினால் 2018 பிப்ரவரி மாதம் இரண்டாம் வாரத்துக்குள் எனக்கு அறிவித்தால் உங்கள் சபைக்கு தேதிகள் ஒதுக்க வசதியாக இருக்கும். ஜெபிக்கவும். **என்னுடைய இ-மெயில் :** jamakaran@yahoo.com.

**FEBRUARY 2018**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.